SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING

செவித்திறன் இழப்பும் (காது கேட்கும் திறன் இழப்பும்) உங்கள் குழந்தையும்: அடுத்த படி

நி.ச.வே — யில் உள்ள குடும்பங்களுக்கான தகவல் தொகுப்பு



நி.ச.வே மாநிலம் தழுவிய குழந்தைப் பரிசோதனை – செவித்திறன் திட்ட முயற்சி

A NSW Statewide Infant Screening-Hearing Program initiative

NSW KIDS + FAMILIES

NSW GOVERNMENT Health

Tamil

NSW குழந்தைகள் மற்றும் குடும்பங்கள்
(NSW KIDS AND FAMILIES)
73 Miller Street
North Sydney NSW 2060
தொலைபேசி. (02) 9391 9483
www.kidsfamilies.health.nsw.gov.au

இப்படைப்பு பதிப்புரிமை பெற்றது. இந்த மூலவளத்திற்கான நன்றியுரை உள்ளடக்கப்படும் பட்சத்தில், ஆய்வு மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காக இது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மறுபதிப்பு செய்யப்படலாம். வணிகப் பயன்பாடு அல்லது விற்பனைக்காக இதனை மறுபதிப்பு செய்யலாகாது. மேலே சொல்லப்பட்டுள்ளவற்றைத் தவிர வேறெந்த நோக்கங்களுக்காகவும் இதனை மறுபதிப்பு செய்யவேண்டுமானால், 'NSW Kids and Families' அமைப்பினரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெற வேண்டும்.

© NSW Kids and Families 2014
ISBN: 978-1-76000-196-4
SHPN: (NKF)150323

இந்த ஆவணத்தின் மேலதிகப் பிரதிகள் வேண்டுமாயின், தயவு செய்து தொடர்பு கொள்க:
Better Health Centre – Publications Warehouse
Locked Mail Bag 5003
Gladesville NSW 2111
தொலைபேசி. (02) 9887 5450
தொலைநகல். (02) 9887 5452

இந்த ஆவணத்தின் மேலதிகப் பிரதிகள்
'NSW Kids and Families' இனது வலைத்தளம்
www.kidsandfamilies.health.nsw.gov.au
இலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

டிசம்பர் 2014

உள்ளடக்கம்

பகுதி 1 இத் தகவல் ஏட்டினை நான் எப்படிப் பயன்படுத்தலாம்?

பகுதி 2 உங்களது குழந்தைக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள்

பகுதி 3 காது கேட்கும் திறன் மற்றும் காது கேட்கும் திறன் இழப்பு

பகுதி 4 இத் தகவல் ஏட்டினை நான் எப்படிப் பயன்படுத்தலாம்?

பகுதி 5 உங்கள் குழந்தையுடன் பேசுதல்

பகுதி 6 ஆரம்ப நிலைத் தலையீடு

பகுதி 7 உதவி

பகுதி 8 கட்டுக் கற்கள்
(Building blocks)

பகுதி 9 மூலவளங்கள் மற்றும் கூடுதல் தகவல்கள்
(Resources & additional information)

முன்னுரை

காது கேட்கும் திறன் இழப்பும் உங்கள் குழந்தையும்: அடுத்த கட்டம். நி.ச.வே – யிலுள்ள குடும்பங்களுக்கான தகவல் தொகுப்பு என்பது மாநிலம் தழுவிய 'குழந்தைப் பரிசோதிப்பு – செவிமடுப்புத் திறன் (SWIS-H) திட்ட' த்தின் ஒரு பகுதியாக தமது குழந்தைக்கு செவிமடுப்புத் திறன் இழப்பு உள்ளது என பெற்றோர் அறியும் போது அவர்களுக்கு நேரிடும் க'டங்களில் அவர்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பரிசோதிப்பு – செவிமடுப்புத் திறன் (SWIS-H) 'திட்டம்' (The Statewide Infant Screening — Hearing (SWIS-H) Program)

பிறந்து 3 மாதங்களில் இரு பக்கங்களிலும் கணிசமான அளவில் காதுகேட்கும் திறன் நிரந்தரமாய்க் குறைந்துள்ள அனைத்து நி.ச.வே மாநிலக் குழந்தைகளையும் அடையாளம் காண்பதும், 6 மாதங்கள் ஆகும் போது தகுந்த சிகிச்சை (intervention) களை இக்குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதும் 'ழந்தைப் பரிசோதிப்பு – செவிமடுப்புத் திறன் (SWIS-H) திட்டம்' என்பதன் நோக்கமாகும். புதிதாய்ப் பிறந்துள்ள அனைத்துக் குழந்தைகளையும் செவிமடுப்புச் சோதனைக்கு ஆட்படுத்துவதன் மூலமாக அடையாளம் காண்பது நிறைவேற்றப்படுகிறது.

புதிதாய்ப் பிறந்துள்ள குழந்தைகளின் செவிமடுப்புப் பிரச்சினைகளைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் உள்ளது. குழந்தைக்கு ஆறு மாதங்களாகும் போது சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டால் சராசரி பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி ஏற்படலாம் என்றும், தொடர்ந்து விசேடக் கல்வி (special education) அளிப்பதற்கான தேவையை மட்டுப்படுத்தலாம் என்றும் ஆய்வுகள் காட்டுவதால் இதைக் கூடிய விரைவில் கண்டுபிடிப்பதும் சிகிச்சையளிப்பதும் இன்றியமையாததாகும்.

தமது பகுதியில் உள்ள அனைத்து மருத்துவ வசதிகளிலும் இந்த பரிசோதிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினைக் கொண்டுள்ள SWIS-H ஒருங்கிணைப்பாளர்கள் ஒவ்வொரு 'மண்டல சுகாதார சேவை' (Area Health Service) யிலும் உண்டு. தமது 'மண்டல சுகாதார சேவை' யில் ஏற்படும் விசேடத் தேவைகளைச் சமாளிப்பதற்கான வாய்ப்பினை இந்த அமைப்புமுறை அளிக்கிறது. தனியார் மருத்துவமனைகளுடன் கொண்டுள்ள சேவை ஒப்பந்தங்கள் (service agreements) மற்றும் ஒவ்வொரு உள்ளூர்ப் பகுதிக்கும் உள்ள தனித் தேவைகளை (உதாரணமாக, பூர்வீகக் குடியினர் மற்றும் கலாச்சாரம் மற்றும் மொழி ரீதியாக பரந்துபட்ட மக்கள்) பூர்த்தி செய்வதற்கென தமது பணியில் கருத்தாயிருக்கும் சோதனையாளர்களை நியமித்தல் போன்ற புதிய அணுகுமுறைகளை SWIS-H ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொள்கின்றனர். செவிமடுப்புச் சோதனைகளிலிருந்து அதிகபட்ச பலனைப் பெறுவது இதன் நோக்கமாகும்.

Automated Auditory Brainstem Response (AABR) எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நி.ச.வே மாநிலத்தில் புதிதாய்ப் பிறந்துள்ள அனைத்து குழந்தைகளையும் சோதிப்பது இத்திட்டத்தில் அடங்குகிறது. இந்த செவிமடுப்புச் சோதனையில் குழந்தைகள் தேர்ச்சியடையாவிட்டால், காது கேட்கும் திறனை மதிப்பிட்டு அறியும் சோதனைக்கு அவர்கள் பரிந்துரைக்கப்படுவர். SWIS-H திட்டத்தினை விவரித்து பெற்றோர்/ கவனிப்பாளருக்கு உதவும் தகவல் ஏடுகள் (brochures) ஆங்கிலம் மற்றும் 16 இதர சமுதாய மொழிகளில் புத்தகங்களாகவும், நி.ச.வே சுகாதாரத் துறையின் இணையதளத்திலும் உள்ளன.

மாநிலம் முழுவதற்கும் குழந்தைமருத்துவ சேவைகள் வழங்கும் மையமாக உள்ள மூன்று குழந்தை மருத்துவமனைகள் (paediatric hospitals) வழியாக SWIS-H செவித்திறன் குறை கண்டறியும் சேவைகள் அளிக்கப்படுகின்றன. புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் அனைத்திற்கும் செவித்திறன் கண்டறியும் சோதனை ஒன்றும், தகுந்த தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவையான மருத்துவ மதிப்பீடுகளும் அளிக்கப்படும். குழந்தை மருத்துவ மனையிலிருந்து கணிசமான தூரத்தில் வாழும் பெற்றோருக்கு அவர்களது பயணச் செலவினைத் திரும்ப அளிக்கும் பொருட்டு 'SWIS-H பயண உதவித் திட்டம்' (SWIS-H Travel Assistance Scheme) ஏற்படுத்தப்பட்டது.

இச் சோதனையைத் தொடர்ந்து, காது கேட்கும் திறன் எந்த அளவுக்குக் குறைந்துள்ளதோ அதற்கேற்பவும், பெற்றோரது விருப்பத்திற்கேற்பவும் தடுப்பு நடவடிக்கைச் சேவைகளுக்கு புதிதாய்ப் பிறந்துள்ள குழந்தைகள் பரிந்துரைக்கப்படுவர்.

விளக்கத் திரட்டு

A

Acoustic nerve ஒலிப்புலன் நரம்பு

செவிப் புல நரம்புகளையும், உடலை சமநிலைப்படுத்தும் நரம்புகளையும் இணைக்கும் மண்டையோட்டில் (மூளையில்) உள்ள எட்டாவது நரம்பு.

Acquired deafness பிறப்பிற்குப் பிறகு ஏற்பட்ட காதுகேளாமை

வாழ்க்கையின் எந்த வேளையிலாவது ஏற்படும் அல்லது உருவாகும் காதுகேளாமை, பிறப்பில் இருப்பதில்லை.

Amplification ஒலி பெருக்கம்

செவிமடுப்புக் கருவிகள் மற்றும் இதர மின்னனு சாதனங்களைப் பயன்படுத்தி ஒலியின் வேகத்தை அதிகரிக்கச் செய்தல்

Assistive Communication (listening) Devices மற்றவருடன் தொடர்பாடல் கொள்வதில் (பேசும் போது செவி மடுக்க) உதவும் கருவிகள்

காது கேளாதோருக்கும் அல்லது குறைவாய்க் கேட்போருக்கும் காது கேட்க உதவும் கருவிகளுடன் சேர்த்து, அல்லது அவற்றிற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் சாதனங்கள். உதாரணத்திற்கு, ஒலிபெருக்கப்பட்ட தொலைபேசி, அதிரும் அலாரம் வைத்த கடிகாரம் அல்லது hearing loop.

Atresia (aural) அட்ரீசியா (செவி சம்பந்தப்பட்ட)

வெளிப்புற செவிக் குழாய் (external ear canal) இல்லாமல் இருக்கும் குறை. வெளிப்புறக் காது மற்றும்.அல்லது செவியின் நடுப்பகுதியிலும் குறை இருக்கும்.

Audiogram ஆடியோகிராம்

செவிப்புலன் சோதனை முடிந்த பிறகு முடிவுகளைப் பதிவு செய்ய அட்டவணை ஒன்று பயன்படுத்தப்படும். சோதனையின் போது வெவ்வேறு வேக அலைவரிசைகளில் எவ்வளவு நன்றாக ஒருவரால் தமது ஒவ்வொரு காதாலும் கேட்க முடியும் என்று காட்டும் அட்டவணை ஒன்றும், வரைபடம் ஒன்றும் இதில் இடம்பெறும்.

Audiological assessment/ evaluation செவிப்புல மதிப்பீடு

காதுகேட்கும் திறன் எந்த அளவுக்கு இழக்கப்பட்டுள்ளது மற்றும் இழப்பின் வகை என்ன என்று காட்டும் பலவித செவிப்புலச் சோதனைகள்.

Audiologist செவிப்புல நிபுணர்

செவிப்புலத் துறையில் பயிற்சி பெற்ற ஒருவர் காதுகேட்கும் திறன் மற்றும் காதுகேளாமை ஆகிய பிரச்சினைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

Audiology செவிப்புலவியல்

செவிமடுக்கும் திறன் மற்றும் செவிமடுப்புக்கோளாறு ஆகியவற்றைப் பற்றிய படிப்பு.

Auditory Brainstem Response (ABR) test செவிமடுப்பு நரம்பு சோதனை

சிசுக்கள் மற்றும் இளம் குழந்தைகளின் காதுகேட்கும் திறனை மதிப்பிட உதவும் சோதனை (குழந்தை தூக்கத்தில் இருக்கும் போது செய்யப்படும்). ஒலி எழுப்பப்படும் போது குழந்தையின் காது நரம்பு எப்படிச் செயலாற்றுகிறது என்பதைத் தலையின் மீது பொருத்தப்பட்டுள்ள மின்முனைக(நடநஉவசழனநள) ளின் மூலம் அளவிடும் சோதனையின் பெயர்தான் எலக்ட்ரோ என்ஸபாலோகிராப் (electroencephalograph) என்பதாகும்.

இதர சோதனைகளின் பெயர்கள்: Brainstem Evoked Response (BSER), Brainstem Auditory Evoked Potential (BAEP), and Brainstem Auditory Evoked Response (BAER).

(Automated) Auditory Brainstem Response ([A]ABR)

இது Auditory Brainstem Response எனும் சோதனையைப் போன்றது. ஆனால் இந்த சோதனையில் தேர்ச்சியா அல்லது பரிந்துரை தேவையா என்று தீர்மானிக்க உண்டாக்கப்பட்ட அலை வடிவங்கள் மாதிரிப் படிவம் (template) ஒன்றுடன் ஒப்பிடப்படும்.

Auditory Neuropathy/ Dysyncrony (AN/AD)

சோதனை முடிவுகளைத் தெரியப்படுத்தும் ஒரு விதம் மற்றும் இது நோய் ஆய்வுறுதி (diagnosis) யோ அல்லது நோய்நிலை (condition) யோ அல்ல. ஒலி காதில் நுழையும் போது AN/AD சாதாரணமாக ஏற்படும், ஆனால், காதின் உட்பகுதியிலிருந்து மூளைக்கு ஒலி கடத்தப்படுவது சாதாரணமாக நடப்பதல்ல.

B

Bilateral hearing loss இருபுற செவித்திறன் இழப்பு

இரு காதுகளிலும் கேட்கும் திறனிழப்பு

Binaural பைனாரல்

இரு காதுகள் சம்பந்தப்பட்ட

விளக்கத் திரட்டு

C

Canal, ear குழாய்/பாதை, செவி

காது மட (pinna) லில் இருந்து செவிப்பறை (eardrum) க்கு ஒலி அலைகள் செல்லும் வழி

Cerumen செருமன்

வெளிப்புறச் செவிப் பாதையில் உண்டாகும் மஞ்சள் அல்லது பழுப்பு நிற மெழுகு போன்ற பொருள் ("earwax").

Cochlea காச்லீ

உட்செவிக்குள் ஒலி அலைகளை நரம்பு உணர்வுகளாக மாற்றி மூளைக்கு அனுப்பும் நத்தை வடிவ குழல்

Cochlear implant செயற்கை காச்லீ பொருத்தல்/வைத்தல்

சேதமுற்ற உட் செவிக்குள் அறுவைசிகிச்சை மூலம் பொருத்தப்படும் மருத்துவ சாதனம். இது உட்புறச் செவி அமைப்புக்களைக் கடந்து நேரடியாய்ச் செவிப்புல நரம்புகளைத் தூண்டி அதியளவு செவித் திறன் இழந்தோருக்கு ஒலிகளையும், பேச்சையும் அர்த்தம் காண உதவும்.

Conductive hearing loss ஒலி கடத்துத் திறன் இழப்பு

மூன்று வகை செவித்திறன் இழப்பில் ஒருவகை (பார்க்க: செவித் திறனிழப்பு)

D

Decibel ஒலி அளவை

ஒலியை அளவிடும் அலகு. செவித்திறனைச் சோதிக்கும் போது dB என்ற குறி ஒலியின் வேகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறுகுறுப் பேச்சின் (whisper) அளவு 20 dB, தொலைபேசி மணியொலி 80 dB மற்றும் புறப்பட்டுக்கொண்டிருக்கும் ஜெட் விமானத்தின் ஒலி 150 dB ஆகும்.

Diagnostic audiologic evaluation செவித் திறன் மதிப்பீட்டுச் சோதனை

ஒருவரது செவித் திறன் நிலை எந்த அளவுக்கு உள்ளது என்று கண்டுபிடிக்க செவிப்புல நிபுணரால் மேற்கொள்ளப்படும் பல வகையான செவித்திறன் சோதனைகள். செவி மடுக்கும் பிரச்சினைகள் உள்ளனவா அல்லது இல்லையா என்றும், அப்படி இருந்தால் அதன் அளவையும் இச் சோதனைகள் காட்டும்.

E

Ear, external வெளிப்புறச் செவி

செவி மடல் (pinna) (நமது பார்வையில் படும் பகுதி, செவிப் பாதை (ear canal) மற்றும் செவிப்பறை (eardrum) யின் வெளிப்பகுதி ஆகியவை 'வெளிப்புறச் செவி' யில் அடங்கும்.

Ear, inner உட் செவி

குழல் பாதை (vestibule), அரை வட்டப் பாதைகள் (semi-circular canals), வட்டவடிவத் திறப்புகள் (oval and round windows) மற்றும் காச்லீ (cochlea) ஆகியன இதில் அடங்கும்.

Ear, middle மத்திய செவி

செவிப்பறை, 'ஆஸிக்கில்ஸ' (ossicles) என அழைக்கப்படும் மூன்று சிறு எலும்புகள் மற்றும் யூஸ்டேியன் குழாய் (eustachian tube) ஆகியன இதில் அடங்கும்.

Earache காது வலி

காதில் ஏற்படும் எந்த விதமான வலி அல்லது நோவு. மருத்துவ ரீதியாக இது 'ஓடால்ஜியா' (otalgia) எனப்படும்.

Eardrum செவிப்பறை

செவிப் பாதையையும் மத்திய செவியையும் பிரிக்கும் மெல்லிய சவ்வுதான் செவிப்பறை என்பதாகும். மருத்துவப் பதம் 'tympanic membrane' என்பதாகும்.

Ear specialist செவிப்புல சிறப்பு மருத்துவர்

பொதுவாக 'ENT' (காது, மூக்கு தொண்டை) (Ear, Nose and Throat) சிறப்பு மருத்துவர் எனப்படுவார்.

Ear wax செவி மெழுகு

வெளிப்புற செவிப் பாதையில் உள்ள மெழுகு பார்க்க: cerumen

Eustachian tube யூஸ்டேியன் குழாய்

மத்திய செவிப்பகுதியில் இருந்து காற்று உள்ளேயும், வெளியேயும் செல்ல அனுமதிக்கும் பாதையான இது மத்திய செவிக்கும் தொண்டையின் பின்புறத்திற்கும் இடையே உள்ளது. மத்திய செவிக்குள் உள்ள காற்றழுத்தமும், செவிப்பறைக்கு வெளியே உள்ள காற்றழுத்தமும் ஒரே மாதிரியாக இருப்பதை இது உறுதி செய்கிறது.

விளக்கத் திரட்டு

F

Feedback எதிரொலி

செவி மடுக்க உதவும் கருவியால் சில வேளைகளில் ஏற்படுத்தப்படும் சீட்டிகை (whistle) போன்ற ஒலி.

Frequency ஒலி அலைவரிசை

ஒலி அலைவரிசைகள் hertz (Hz) and kilohertz (kHz) எனும் அளவைகளில் அளவிடப்படுகின்றன. (1000Hz = 1kHz).

G

Genetic deafness மரபு வழிப்பட்ட காது கேளாமை

தவறான மரபணுக்களால் ஏற்படுத்தப்பட்ட காது கேளாமை.

Glue ear காதுப் பசை

மத்திய செவிப் பகுதியில் ஏற்படும் சாதாரண நோய்ப்பரவல் (infection) பிரச்சினை. நோய் குணமான பறகு மத்திய செவிப் பகுதியின் குழியில் தேங்கும் தடித்த, பிசுபிசுப்பான திரவமே 'பசை' ('glue') எனப்படும்.

Grommets க்ரோமட்ஸ்

காதுப் பசைக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் போது குழந்தையின் செவிப்பறைக்குள்ளாக புகுத்தப்படும் பிளாஸ்டிக் குழாய்கள்.

H

Hair cells உரோம உயிரணுக்கள்

ஒலி அலைகளை மின் தூண்டல்க (electrical impulses) ளாக மாற்றி பிறகு செவி நரம்பு (auditory nerve) வழியாக மூளைக்கு அனுப்பும் உட் செவிக்குள் காணப்படும் உரோமம் போன்ற அமைப்புக்கள்.

Hearing aid செவிமடுப்புக் கருவி

செவித் திறனிழப்பு உள்ளோருக்கு ஒலிகளைக் கேட்கும் அளவுக்கு ஒலிப்பெருக்கம் செய்யும் மின் சாதனம்.

Hearing aid, Behind-the-Ear (BTE) காதுக்குப் பின்புறம் பொருத்தும் செவிமடுப்புக் கருவி

காதுக்குப் பின்புறம் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு வகை செவிமடுப்புக் கருவி.இது குழாய் மற்றும் ஒரு 'custom earmold' வழியே ஒலியைக் கடத்தும்.

Hearing aid, Completely-in-the-Canal (CIC) செவிப் பாதைக்குள் பொருந்தும் செவிமடுப்புக் கருவி

அளவில் மிகச் சிறிய ஒரு வகை செவிமடுப்புக் கருவி மற்றும் செவிப்பாதைக்குள் முற்றிலுமாக இது பொருந்தி இயற்கையாகக் கேட்பதைப் போன்ற தோற்றத்தைத் தரும். அணிவோரின் காது அளவுக்கேற்ப இது விருப்பம் போல் வடிவமைத்துத் தரப்படும்.

Hearing aid, In-the-Ear (ஐவுது) செவிமடலில் பொருந்தும் செவிமடுப்புக் கருவி

வெளிக்காதுக்குள் பொருந்தும் ஒருவகை செவிமடுப்புக் கருவி. அணிவோரது காதின் பாதை அளவுக்கேற்ப இது வேண்டும் வகையில் வடிவமைத்துத் தரப்படும்.

Hearing loop system 'லூப்' உள்ள செவிமடுப்புக் கருவி

ஒலி வாங்கி, ஒலிபெருக்கி மற்றும் கம்பி (loop of wire) ஆகியவற்றைக் கொண்ட செவி மடுக்க உதவும் கருவி (Assistive Listening Device). இக் கம்பியைக் கழுத்தைச் சுற்றி அணிந்து கொள்ளலாம் அல்லது அறையில் எங்கும் பொருத்தலாம். "லூப;"- வேலை செய்யும் இடத்தில் இடத்தில் இதை அணிந்து கொண்டிருப்போரின் செவி மடுப்புக் கருவிகளுக்கோ அல்லது தலையில் அணியும் ஒலிபெருக்கிக்கோ ஒலி நேராக அனுப்பப்படும். இதனால் தொலைவு மற்றும் சத்தம் ஆகியவற்றால் ஏற்படும் இடைஞ்சல்கள் குறைக்கப்படுகின்றன.

பொது இடங்களில் 'hearing loop' பொருத்தப்பட்டுள்ள இடங்களில் பன்னாட்டு செவிமடுப்பின்மைக் குறி (The International Deafness Symbol) பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

Hearing loss, conductive நரம்பு உணர்வு சம்பந்தப்பட்ட செவித் திறனிழப்பு

இகாச்லீஇ (cochlea) வரைக்கும் ஒலி அழுத்த அலைகள் சென்று அடையாமல் இருப்பதால் ஏற்படும் செவிப்புலக் கோளாறு. இவ்வகைப்பட்ட கோளாறை மருத்துவ அல்லது அறுவை சிகிச்சை மூலம் சரிப்படுத்த இயலலாம்.

Hearing loss, mixed ஒன்றுக்கும் மேற்பட்ட கோளாறுகளால் ஏற்படும் செவிப் புலன் இழப்பு

ஒலி கடத்தல் மற்றும் செவிப்புலன் நரம்பு ஆகியன சம்பந்தப்பட்ட கோளாறுகளால் ஏற்படும் செவித் திறனிழப்பு.

விளக்கத் திரட்டு

Hearing lossஇ sensorineural நரம்பு உணர்வு சம்பந்தப்பட்ட செவித் திறனிழப்பு

'காச்லீ' (cochlea) – யில் ஏற்படும் சேதாரத்தினால் உண்டாகும் காது கோளாறு. பொதுவாய் இக் கோளாறினைச் சரிப்படுத்த இயலாது.

Hertz (Hz) ஹெர்ட்ஸ்

செவிமடுப்புத் திறனைச் சோதிக்கும் போது ஒலியின் தொனியளவைக் காட்ட Hz என்ற குறியீடு பயன்படுத்தப்படுகிறது. 250 Hz உள்ள ஒலி மிகக் குறைந்த தொனியளவைக் கொண்டதாகும் மற்றும் 8000 Hz கொண்ட ஒலியின் தொனி அலைவரிசை மிக அதிகமானதாகும்.

Hearing screening செவிப்புல சோதனை

சோதனையின் போது காது நன்றாகக் கேட்கிறதா அல்லது மேலும் சோதனைகள் தேவையா என இது தீர்மானிக்கிறது. காது கேட்கும் திறனில் பிரச்சினைகள் ஏதும் இருக்கிறதா என அறியும் விரிவுபட்ட சோதனையிலிருந்து இது வேறுபடுகிறது.

இந்த ஆரம்ப கட்டச் சோதனையில் பிரச்சினைகள் ஏதும் காணப்பட்டடால், பொதுவாக மறு பரிசோதனை ஒன்று நடத்தப்படும். இரண்டாவது சோதனைக்குப் பிறகு, தேவைப்பட்டால், காது கேட்கும் திறனில் பிரச்சினைகள் ஏதும் இருக்கிறதா என அறியும் விரிவுபட்ட சோதனை ஒன்றிற்காகப் பரிந்துரை செய்யப்படும்.

I

Impression பதிப்பு

வெளிச் செவியின் அளவுக்கேற்ப செய்யப்படும் மாதிரி (cast)யிலிருந்து BTE சாதனங்கள் அல்லது ITE, ITC மற்றும் CIC சாதனங்களுக்கான வாடிக்கையாளரது தேவைக்கேற்ற வெளிக் கூடுகள் (shells) செய்யப்படுகின்றன. இந்த மாதிரிப் பதிப்புக்க (impressions) ளைச் செய்ய இசிலிகோன்இ எனும் பொருள் அல்லது காதுக்குள் வைப்பதற்கு ஏதுவான மிருதுவான பொருள் ஒன்று பயன்படுத்தப்படுகிறது.

L

Lip read உதட்டு அசைவைக் கொண்டு பேசுவதைப் புரிந்து கொள்ளல்

பேசுபவரது உதட்டு அசைவுகளை உன்னிப்பாய்க் கவனித்துப் புரிந்து கொள்ளுதல். முக பாவனைகளும், உடல் அசைவுகளும் தொடர்பாடலில் பங்குபெறுவதால் இது பொதுவாகப் இபேச்சைப் படித்தல்இ (speechreading) என இப்போது அழைக்கப்படுகிறது.

M

Microtia மைக்ரோியா

வெளிக் காதின் அசாதாரண வளர்ச்சி. இதோல் தொங்கல்இ போன்ற காதின் வடிவத்தில் ஏற்படும் சிறு வித்தியாசங்களிலிருந்து வெளிக் காதே இல்லாமலிருக்கும் நிலை வரை இந்த நோயின் தீவிரத் தன்மை மாறுபடும்.

Mixed hearing loss ஒன்றுக்கும் மேற்பட்ட கோளாறுகளால் ஏற்படும் செவிப் புலன் இழப்பு

மூன்று வகைப்பட்ட செவித்திறன் இழப்புகளில் ஒன்று ('செவித்திறன் இழப்பு' எனும் பகுதியைப் பார்க்க).

N

Nerve, cochlear காச்லீயர் நரம்பு

மண்டையோட்டுக்குள்ளிருந்து பிரியும் எட்டாவது (ஒலி சம்பந்தப்பட்ட) நரம்பு. இது 'காச்லீயா' (cochlea) பகுதியில் வெளித்தோன்றுகிறது மற்றும் ஒலி உணர்வுகளை மூளைக்குக் கடத்துகிறது.

O

Ossicles ஆஸிக்கில்ஸ்

ஒலி உணர்வுகளை செவிப்பறை (eardrum) யிலிருந்து நீள்வட்ட வடிவத் திறப்பு (oval window) க்கு எடுத்துச் செல்லும் மத்தியச் செவியில் உள்ள சிறு எலும்புகள். இவை 'hammer' (malleus), 'anvil' (incus), and 'stirrup' (stapes) என்று அழைக்கப்படும்.

Otitis காது வீக்கம்

காது வீக்கத்தைக் குறிக்கும் பரந்த பதம்.

Otitis Media (OM) ஒடைடிஸ் மீடியா

காதின் மத்தியப்பகுதியில் ஏற்படும் நோயப்பரவல் (infection). காதில் நோய்ப்பரவல் அடிக்கடி ஏற்படும் குழந்தைகளுக்கு வெவ்வேறு அளவிலான செவித் திறனிழப்பு ஏற்படலாம் மற்றும் இவர்களுக்கு பேச்சு மற்றும் மொழி வளர்ச்சியில் தாமதங்கள் ஏற்படலாம்.

விளக்கத் திரட்டு

Otoacoustic Emissions (OAE) செவியில் உண்டாகும் ஒலி

அலைகளை அளவிடும் சோதனை

மெல்லிய தட்டும் ஓசைக (clicks or tone bursts) ளைத் தொடர்ந்து செவியின் 'காச்லீ' (cochlea) பகுதியில் உண்டாகும் ஒலி அலைகளை அளவிடுவதற்காக செவிப் பாதையில் ஒலிவாங்கி (microphone) ஒன்று வைக்கப்பட்டு செய்யப்படும் சோதனை.

P

Perforated eardrum செவிப்பறைச் சேதம்

விபத்து அல்லது நோயின் காரணமாக சேதமுற்ற செவிப்பறை.

Pinna வெளிக் காது

தலையின் ஓரப்பக்கத்தில் பார்வையில் படும்படி அமைந்துள்ள செவியின் பகுதி.

Profound deafness ஆழ்ந்த செவித்திறன் இழப்பு

முழு செவித் திறன் இழப்பிற்கு அருகிலுள்ள தீவிர நிலை.

Pure tone சுத்த ஒலி

ஒரே அலைவரிசையில் தொடரும் ஒலி, பொதுவாக இது அடிப்படை செவிமடுப்பு சோதனைகளில் பயன்படுத்தப்படுகிறது.

R

Risk factor ஆபத்துக் கூறு

செவித் திறன் இழப்போடு குழந்தை பிறப்பதற்கும், அல்லது இந்த நிலை பிறகு ஏற்படுவதற்கும் உள்ள வாய்ப்பினை அதிகப்படுத்தும் கூறு. செவித் திறனிழப்பு உள்ள குடும்ப வரலாறு, மெனிஞ்ஜைட்டிஸ் எனும் நோய், பிறப்பிலிருந்தே உள்ள நோய்ப்பரவல் (congenital infection), மிகக் குறைவான எடையோடு பிறத்தல் ஆகியன ஆபத்துக் கூறுகளுக்குள் அடங்கலாம்.

S

Statewide Infant Screening-Hearing (SWIS-H) மாநிலம் தழுவிய குழந்தைப் பரிசோதனை – செவிப்புலன்

பிறந்த முதல் சில நாட்களுக்குள்ளாக நி.ச.வே மாநிலத்தில் உள்ள அனைத்து புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் செவிமடுப்புத் திறன் பரிசோதிப்புத் திட்டம்.

Severe deafness தீவிர செவித்திறன் இன்மை

காது கேட்கும் கருவியைப் பயன்படுத்தும் அளவுக்கு உள்ள செவித்திறன் இன்மை.

Sign language சாடை மொழி

காதுகேளாதோர் தொடர்பாடல் கொள்வதற்காகக் கைகளைப் பயன்படுத்திக் காட்டப்படும் சாடைகள், அசைவுகள் மற்றும் குறியீடுகள். விரல்களைப் பயன்படுத்தி 'spell' செய்வதில் இருந்து இது தெளிவாய் மாறுபட்டது.

Stethoclip ஸ்டெத்தோகிளிப்

காது கேட்க உதவும் கருவி சரியாய் இயங்குவதை உறுதி செய்ய இதைப் பயன்படுத்துவோருக்கு உதவும் கருவி.

T

Tympanic membrane டிம்ப்பனிக் சவ்வு

பார்க்க: செவிப்பறை.

U

Unilateral hearing loss டழளள ஒரு பக்க செவித்திறன் இழப்பு

ஒரு காதில் மட்டும் ஏற்பட்டுள்ள செவித்திறன் இழப்பு

இந்தத் தகவல் ஏட்டினை எப்படிப் பயன்படுத்துவது?

இத் தகவல் ஏடு எதற்காக?

உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ள போது நீங்கள் பயன்படுத்துவதற்காக உள்ளதுதான் இத் தகவல் ஏடு. இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. வரவிருக்கும் மாதங்களில் உங்களுக்குத் தேவைப்படும் காது கேட்கும் திறன் இழப்பு குறித்த தகவல்கள் இதன் பிரதான பகுதியில் அடங்கியுள்ளன.

பிளாஸ்டிக் பைகளில் வைக்கப்பட்டுள்ள சிறிய பக்கங்களை நீங்கள் உங்களது குழந்தையின் 'உடல்நலப் பதிவேட்' (Personal Health Record) டில் வைக்க வேண்டும்.

உள்ளடக்கம்

கீழ்வருவன குறித்த தகவல்கள் அடங்கியுள்ள பிரதான பகுதி நீங்கள் வீட்டில் வைத்துக்கொள்வதற்கென உள்ளது:

- செவிமடுப்பு மற்றும் செவிமடுப்புத் திறனிழப்பு
- உங்கள் குழந்தையுடன் நீங்கள் எப்படிப் பேசுவது (தொடர்பாடல் கொள்வது)?
- உங்கள் குழந்தையுடன் நீங்கள் எப்படிப் பேசலாம் (தொடர்பாடல் கொள்ளலாம்)?
- மேலதிகத் தகவல்கள் எங்கு கிடைக்கும்?
- உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய பதங்கள்

இந்த ஒவ்வொரு தலைப்பு குறித்தும் விளக்கும் பகுதிகள் இக் கோப்பில் உள்ளன. உங்களுக்கு இருக்கக் கூடிய ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிப்பது இத் தகவல்களின் நோக்கம் அல்ல, இருப்பினும் இன்னும் கேள்விகள் கேட்கவும் மற்றும் மேலதிக விவரங்களை எங்கு பெறலாம் என நீங்கள் அறியவும் இது உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

தமது குழந்தைக்குக் காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறது என அறிந்த பிறகு பெற்றோர்கள் கேட்கும் பொதுவான கேள்விகளிலிருந்து இத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மற்ற பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட அறிவுரை மற்றும் உதவி

காது கேட்கும் திறன் இழப்புள்ள குழந்தைகளது பெற்றோரது ஒத்துழைப்புடன் இந்தத் தகவலேடு தயாரிக்கப்பட்டது. இந்தத் தகவலேடு நெடுகவும் இப் பெற்றோர்கள் தமது அனுபவம் மற்றும் அறிவுரை-ஆலோசனைகளை உங்களுடன் பகிர்வர்.

பகுதி 8: 'அடிப்படை விவரங்கள்' ('Building blocks') என்பதில் செவித்திறன் இழப்புள்ள குழந்தையின் பெற்றோர்களால் மற்ற பெற்றோருக்காக எழுதப்பட்ட வழிகாட்டும் தகவல்கள் அடங்கியுள்ளன.

நீங்கள் வைத்துக் கொள்ளவும், பயன்படுத்தவும் மற்றும் காலப் போக்கில் வேறு விவரங்களைச் சேர்க்கவும் கூடிய தகவல் கோப்பு (resource folder)

உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறது என அறிந்த பிறகு வரும் வாரங்களிலும், மாதங்களிலும் உங்களுக்குப் பயன்படக் கூடிய தகவல்கள் இக் கோப்பில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தை வளர, வளர நீங்கள் இதைப் பயன்படுத்துவீர்கள் மற்றும் இன்னும் அதிக விவரங்களை இதில் சேர்ப்பீர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் இழப்பு குறித்து உங்களுக்குத் தரப்படும் அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் வைக்க உங்களுக்கு உதவும் ஒரு வழிதான் இந்தக் கோப்பு, மற்றும் உங்களது சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள உதவும் ஒரு வழியாகவும் இது பயன்படும்.

உங்களுக்குத் தரப்படக் கூடிய எந்தத் தகவல்களையும் 'பயனுள்ள தகவல்கள் மற்றும் கூடுதல் விவரங்கள்' (Resources and additional information) எனும் பகுதி 9 -இல் நீங்கள் சேர்த்து வைக்கலாம்.

இந்தத் தகவல் ஏட்டினை எப்படிப் பயன்படுத்துவது?

சொந்த உடல்நலப் பதிவேடு - "எனது முதல் உடல்நலப் பதிவேடு" (Personal Health Record, "My First Health Record")

உங்களது குழந்தையின் சொந்த உடல்நலப் பதிவேடான "எனது முதல் உடல்நலப் பதிவேடு" என்பதில் பிளாஸ்டிக் பையிலுள்ள சிறு பக்கங்களை நீங்கள் வைக்க வேண்டும்.

"எனது முதல் உடல்நலப் பதிவேடு" என்பதில் உங்கள் குழந்தையின் உடல்நலம் குறித்த பொதுவான அனைத்துத் தகவல்களும் அடங்கும், மற்றும் பிறப்பிலிருந்து பள்ளி செல்லும் வயது வரையிலும் உங்களது குழந்தையின் வளர்ச்சியைக் காட்டும் பதிவேடாகவும் இது அமையும். அவர்களது வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் தேவைப்படும் உடல்நலப் பரிசோதனைகளைக் குறித்த தகவல்களையும் இது உள்ளடக்கும்.

உங்கள் குழந்தையின் உடல்நலப் பதிவேட்டில் நீங்கள் செருக வேண்டிய பக்கங்கள் குறிப்பாக உங்களது குழந்தைக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்ட செவித் திறனிழப்பு சம்பந்தப்பட்டதாயிருக்கும்.

உங்களது குழந்தையுடன் நீங்கள் செல்லும் ஒவ்வொரு பார்வைநேர (appointment) த்தின் போதும் இந்த உடல்நலப் பதிவேட்டினை நீங்கள் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். பொது மருத்துவர்கள் (GPs), சிறப்பு மருத்துவர்கள் (medical Specialists) மற்றும் இதர சுகாதாரத் தொழிலர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

இப் பக்கங்களில் நீங்கள் நிரப்ப வேண்டிய காலி இடங்கள் உள்ளன.

- நோய்க் கண்டுபிடிப்பைப் பற்றிய தகவல்கள் - உங்களது குழந்தையைச் சோதிக்கும் செவியொலி நிபுண (audiologist) ரால் இது பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு காதிலும் உள்ள கேட்கும் திறன் இழப்பின் தீவிரத் தன்மையையும், அதற்கான பரிந்துரைகள் பற்றிய குறிப்பிட்ட தகவல்களும் இதிலிருக்கும்.
- மருத்துவத் தொழிலர்கள் (Professionals): உங்கள் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவரது பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களை நீங்கள் நிரப்புவதற்கென இதில் காலியிடங்கள் இருக்கும்.
- திட்ட நாள்காட்டி (Planning calendar): வருடம் நெடுக உங்கள் குழந்தைக்கான பார்வைநேரங்களை நீங்கள் முன்னரே கண்டுகொள்ள உதவும் நல்ல வழியாகும் இது.
- பார்வைநேரச் செலவுகளைக் காட்டும் அட்டவணை: உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பு சம்பந்தமாக ஆகும் மருத்துவ மற்றும் இதர சேவைகளுக்கு ஆகும் செலவுகளைக் குறித்து வைக்கும் நல்ல வழியாகும் இது. பெரும்பான்மையான செவி ஒலியியல் சேவைகள் (audiological services) இலவசமானவையாகும்.
- முற்பட்ட தலையீடு (Early intervention) – உங்களது குழந்தைக்கு ஏற்ற முற்பட்ட சிகிச்சையினை நீங்கள் தேர்ந்தெடுக்க உதவும் சரிபார்ப்பு அட்டவணை (checklist) யாகும் இது.

உங்கள் குழந்தைக்கான அடுத்த நடவடிக்கைகள்

உங்கள் குழந்தைக்குக் கணிசமான அளவில் செவித்திறன் இழப்புஇருப்பதை இன்று நடந்த சோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளன. வரவிருக்கும் மாதங்களில் வெவ்வேறு மருத்துவர்களுடன் நீங்கள் பல பார்வை நேரங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

நீங்கள் யார் யாரைப் பார்க்க வேண்டியிருக்கும் என்று உங்களது செவிஒலியியல் நிபுணர் சொல்லுவார் மற்றும் தேவைப்பட்டால் அவர்களைச் சந்திப்பதற்கான உங்களது பார்வை நேரங்களையும் அவர் ஏற்பாடு செய்வார்.

ஒவ்வொரு சிறப்பு மருத்துவரும் உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பு குறித்து உங்களுக்கு மேலதிக விவரங்கள் வழங்குவார்.

சில நேரங்களில் உங்களை அயர வைக்கும் அளவிற்கு இத் தகவல்கள் அதிகமாயிருக்கும். அடுத்த இரு மாதங்களில் நீங்கள் யாரைப் பார்க்க வேண்டியிருக்கும் என்பதை விளக்கும் ஒரு வழிகாட்டியாகும் இது.

உங்களது அடுத்த நடவடிக்கைகளில் உங்கள் குழந்தையைப் பற்றிச் செய்யப்பட்டுள்ள மருத்துவக் கண்டுபிடிப்பு சம்பந்தமான விவரங்கள் அனைத்தையும் பதிவு செய்து வைப்பது அடங்கும். உங்களது குழந்தையின் உடல்நலப் பதிவேட்டில் சேர்க்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள சிறிய பக்கங்களில் இந்தத் தகவல்கள் பதிவு செய்யப்படலாம்.

உங்கள் குழந்தைக்கு இருக்கும் குறையின் கண்டுபிடிப்பு சம்பந்தமான தகவல்களையும், உங்கள் குழந்தையின் உடல்நலக் கவனிப்புக் குழுவினரது விவரங்களையும் தெளிவாகக் குறிப்பிட உங்களுக்கு உதவும் வகையில் இப் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பார்வைநேரங்களைத் திட்டமிடுவதற்கான வருட நாள்காட்டி, பார்வைநேரங்கள் மற்றும் செலவுகளுக்கான அட்டவணை மற்றும் முற்பட்ட தலையீடு குறித்த சரிபார்ப்பு அட்டவணை ஆகியன இதில் அடக்கம்.

'ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை' (Australian Hearing) — க்கான பரிந்துரை

குழந்தைகளுக்கு (21 வயது வரையிலும்) பலவகைப்பட்ட சேவைகளை 'ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை' வழங்குகிறது. ஒவ்வொரு குழந்தையின் பேச்சு, கல்வி மற்றும் தொடர்பாடல் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு 'குழந்தைகள் சேவைத் திட்டம்' (Paediatric Services Program) ஒன்றை *Australian Hearing* நடத்துகிறது.

'ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை' -யினால் வழங்கப்படும் சேவைகளில் பின்வருவன அடங்கும்.

- எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் பரந்துபட்ட செவிமடுப்பு மதிப்பீடுகள்
- அதி நவீன சாதனங்களைப் பொருத்துவது மற்றும் மேம்படுத்துவது
- செவிமடுப்பு சாதனங்களைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழந்தையின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்
- cochlear implants - களைப் பயன்படுத்தும் குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் பேட்டரிகள் (batteries), மாற்று உதிரிப் பகுதிகள் ஆகியவற்றை வழங்குவது மற்றும் processors- களை மேம்படுத்துவது

'ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை' (Autralian Hearing) என்பது 'பொதுநலஅரசு மனித சேவைகள் துறை' (Commonwealth Department of Human Services) யின் ஒரு பகுதியாகும்.

அனுபவம் மிக்க குழந்தை செவிஒலிநிபுணர்கள் (Paediatric Audiologists) உங்களைப் பார்ப்பர். இவர்கள் உங்கள் குழந்தையின் செவித்திறன் குறித்து உங்களுடன் விரிவாகக் கலந்துரையாடுவர் மற்றும் விரைவான தலையீடு (விரைவான சிகிச்சை) குறித்து உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தருவர். வரவிருக்கும் ஆண்டுகளில் *Australian Hearing* தொடர்ந்து உங்கள் குழந்தையின் செவித்திறனை மதிப்பீடு செய்துவரும். உங்களுக்கு CHOICES எனும் கையேடு ஒன்று வழங்கப்படும். *Australian Hearing* -இல் உள்ள செவிஒலிநிபுணர் ஒருவர் இதை உங்களுக்குத் தருவார்.

உங்கள் குழந்தைக்கான அடுத்த நடவடிக்கைகள்

ஆய்வுகள்

பல சிசுக்களும் குழந்தைகளும் அவர்களது சொந்த குழந்தை மருத்துவர் அல்லது பொதுமருத்துவரால் பார்க்கப்படுவர்.

இம் மருத்துவர்கள் குழந்தைகள் சுகாதாரத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். பேச்சு வளர்ச்சி உட்பட குழந்தையின் பொது உடல்நலம் மற்றும் வளர்ச்சி முன்னேற்றம் குறித்து தொடர்ந்த சோதனைகளைஇ வர்களால் அளிக்கஇ யலும். செவித்திறன் இழப்பிற்கு என்ன காரணம் என்பது குறித்து கலந்துரையாடவும், ஆய்வுகளுக்கு ஏற்பாடு செய்யவும் அல்லது சிறப்பு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கவும்இ வர்களால்இ யலலாம். சில சோதனைகள் (உதாரணத்திற்கு, நோய்ப்பரவல் (infection)) குழந்தை பிறந்த முதல் மாதத்திலேயே செய்யப்படவேண்டும், அப்போதுதான் இவை உபயோகமானதாக இருக்கும். மற்ற சோதனைகளை (உதாரணமாக, மரபுவழிக் காரணங்கள் (genetic causes)) பிறகு செய்யலாம்.

'செவித்திறன் ஆதரவு சேவை' (சிட்னி குழந்தைகள் மருத்துவமனை, ரான்ட்விக்) (The Hearing Support Service (Sydney Children's Hospital, Randwick)), ஜான் ஹன்ட்டர் மருத்துவமனை, செவி ஒலியியல் துறை மற்றும் செவிமடுப்பின்மை மையம் (வெஸ்ட்மெட்-இல் உள்ள குழந்தைகள் மருத்துவமனை) (John Hunter Hospital Audiology Department and the Deafness Centre (The Children's Hospital at Westmead)) ஆகிய மருத்துவமனைகள் உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பிற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க தேவைப்படும் சிறப்பு உதவி அளிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளன.

மேலதிகத் தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

- Hearing Support Service (Sydney Children's Hospital, Randwick)
  தொலைபேசி: (02) 9382 1297
- Deafness Centre (The Children's Hospital at Westmead),
  தொலைபேசி: (02) 9845 2139

  அல்லது
- John Hunter Hospital, Audiology Department
  தொலைபேசி: (02) 4921 3548.

காது மூக்கு மற்றும் தொண்டைக்கான மருத்துவ ஆலோசனை

கணிசமான அளவில் செவித்திறன் இழப்புள்ள எக் குழந்தையும் காது மூக்கு மற்றும் தொண்டை மருத்துவரிடம் பார்வைநேரம் ஒன்றைப் பெற வேண்டும்.

உங்கள் குழந்தைக்கு செவிமடுப்பு சாதனம் பொருத்துவதற்கான மருத்துவக் காரணங்கள் ஏதும் இல்லை என்று சொல்லி 'ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை' *(Australian Hearing)* -க்கு இசைவுக் கடிதம் (clearance letter) ஒன்றையும் காது மூக்கு மற்றும் தொண்டை மருத்துவரால் உங்களுக்கு வழங்க இயலும்.

சமூக சேவை

உணர்வு பூர்வ மற்றும் நடைமுறைக்கு ஏற்ற அறிவுரை-ஆலோசனை மற்றும் ஆதரவினை வழங்கக் கூடிய சமூக சேவகர் ஒருவர் கிட்டுவார்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் தற்சமயம் இருக்கக் கூடிய கவலைகளைச் சமாளிக்க சமூக சேவகர் ஒருவரால் உதவ இயலும், மற்றும் இவரால் உங்கள் குழந்தைக்குத் தேவைப்படும் ஆதரவு மற்றும் தலையீட்டுச் சேவைக (intervention services) ளைக் கண்டறிவதிலும் இவரால் உதவ இயலும்.
பார்க்க பகுதி 7: உதவிகள்

செவிஇயல் நிபுண(Audiologist)ரிடம் நீங்கள் கேட்கும் கேள்விகள்

என் குழந்தைக்கு எந்த அளவிற்குக் காது கேட்கும்?

sensorineural (நரம்பு-உணர்வு சம்பந்தப்பட்ட), conductive (ஒலி கடத்தும்), mixed (பல காரணங்களால் ஏற்பட்ட), mild (ஓரளவுக்கே ஆன), moderate (கணிசமான), severe (மிகத் தீவிரமான), profound (ஆழ்ந்த), auditory (செவிமடுப்பு குறித்த), neuropathy (நரம்பியல் மருத்துவம்) எனும் பதங்களுக்கு அர்த்தம் என்ன?

குழந்தைக்கு ஏற்பட்டுள்ள இழப்பு நிரந்தரமானதா?

இன்னும் அதிக சோதனைகளுக்குத் தேவை இருக்கிறதா?

என் குழந்தையின் காது கேட்கும் திறனை நான் எப்போதெல்லாம் மறுசோதனை செய்ய வேண்டும்?

இந்த செவித் திறன் இழப்பு இன்னும் மோசமாகுமா அல்லது மாறுமா என உங்களால் சொல்ல இயலுமா?

இரண்டு காதுகளிலும் ஏற்பட்டுள்ள இழப்பு ஒரே மாதிரியானதா?

இந்த செவித்திறன் இழப்பு என் குழந்தையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கும்?

என் குழந்தைக்கு செவிமடுப்பு சாதனம் (hearing aid) தேவைப்படுமா? என் குழந்தைக்கு செவிமடுப்பு சாதனங்கள் இரண்டு காதுகளுக்கும் தேவைப்படுமா?

எனது குழந்தைக்கு செவிமடுப்பு சாதனம் காலம் முழுவதும் தேவைப்படுமா?

செவிமடுப்பு சாதனங்களுக்கு எவ்வளவு செலவாகும்?

செவிமடுப்பு சாதனங்களைப் பயன்படுத்தி என் குழந்தையால் என்ன கேட்க இயலும்?

எல்லா நேரங்களிலும் செவிமடுப்பு சாதனத்தை அணிய வேண்டிய தேவை என் குழந்தைக்கு இருக்குமா?

எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை செவிமடுப்பு சாதனங்களை மாற்ற வேண்டியிருக்கும்?

செவிமடுப்பு சாதனங்களுக்கு புதிய பாகங்கள் (parts) தேவைப்படுமா?

செவிமடுப்பு சாதனங்களை என் குழந்தை அணிய மறுத்தால் என்ன செய்வது?

என் குழந்தைக்கு 'காக்லியா' பொருத்துவது (cochlear implant) ஒரு வழியாகுமா?

என் குழந்தையின் செவித்திறன் குறித்த உதவிக்கு நான் வேறு எங்கு செல்ல வேண்டும்?

வேறெந்த வழிகளில் என்னால் என் குழந்தைக்கு உதவ இயலும்?

செவிமடுப்பு சாதனங்கள் பார்வைக்கு எப்படி இருக்கும்?

"செவிஒலியியல் நிபுணரிடம் கேட்கும் கேள்விகள்" சுகாதார மற்றும் மனித சேவைத் துறை, நோய்க் கட்டுப்பாட்டு மையம், USA தகவல் ஏடு ("Audiologist Questions" Department of Health and Human Services, Centre for Disease Control, USA pamphlet) என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.

உங்கள் குழந்தைக்கான உடல்நலக் கவனிப்புக் குழு

உங்கள் குழந்தைக்கான உடல்நலக் கவனிப்புக் குழுவில் இடம் பெறக் கூடிய பல தொழிலர்கள் (professionals) உண்டு.

உங்கள் குழந்தையின் சிறப்பு மருத்துவர்களது தொடர்பு விவரங்களைப் பதிவுசெய்து வைப்பதற்கென 'சொந்த உடல்நலப் பதிவே' (Personal Health Record) ட்டுப் பக்கங்களில் ஒரு பகுதி உண்டு.

செவிஒலியியல் நிபுணர்கள்

அனைத்து வயதைச் சார்ந்தோருக்கும் செவிமடுப்பு, உடல் சமநிலைப்பாடு (balance) மற்றும் இவை தொடர்பான கோளாறுகளை அடையாளம் கண்டு, மதிப்பீடு செய்து சிகிச்சையளிக்கும் சுகாதாரத் தொழிலர்களே செவிஒலியியல் நிபுணர்கள் (Audiologists) ஆவர். நோயுற்றோருக்கும். அவரது குடும்பத்தினருக்கும் இவர்கள் அறிவுரை-ஆலோசனை வழங்குவர். செவிப்புலக் கோளாறு சம்பந்தப்பட்ட திட்டங்கள் மற்றும் சேவைகளை இவர்கள் நிர்வகித்துக் கண்காணிப்பர். செவிமடுப்பு மற்றும் இது தொடர்பான கோளாறுகளைக் கவனிக்கும் பெரிய சிறப்பு மருத்துவர் குழுவில் இவர்கள் பெரும்பாலும் ஒரு அங்கமாயிருப்பர்.

காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர்கள்

காது அல்லது மூக்கு அல்லது தொண்டை ஆகியவை சம்பந்தப்பட்ட கோளாறுகளில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்களே 'காது' மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர்கள்' ஆவர். தேவைப்படும் போது இவர்கள் அறுவை சிகிச்சை செய்வர், மற்றும் நீடித்து வரும் மத்திய செவி நோய் (middle ear disease) க்கான ஆலோசனை மற்றும் சிகிச்சையை இவர்கள் அளிப்பர். காச்லியா (cochlear implant) பொருத்தினால் பலன் பெறுவார்கள் என எண்ணப்படும் குழந்தைகளுக்கு சில ENT மருத்துவர்கள் cochlear implant–ஐயும் பொருத்துவர்.

கண் சிறப்பு மருத்துவர்கள்

கண்ணில் ஏற்படும் நோய்கள் அல்லது கோளாறுகளுக்கான சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவரே 'ophthalmologists' ஆவர். செவித்திறன் கோளாறு உள்ள அனைத்துக் குழந்தைகளும் கண் மருத்துவரிடம் சோதனை ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கப்படுகின்றது. சில வேளைகளில், காது கேளாமை கண் பிரச்சினைகளோடு தொடர்புடையதாயிருக்கும்.

மரபியல் நிபுணர்கள்

குடும்பத்தவருக்கு திடீரெனத் தோன்றும் அல்லது திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும் சில குறிப்பிட்ட நோய்நிலைகள் குறித்தும் மற்றும் மரபுவழியாய் அவை தோன்றும் தன்மை குறித்தும் அறிவுரை கூறும் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மரபியல் நிபுணர்கள் எனப்படுவர். காது கேளாமையின் பல வகைகள் மரபியல் பின்னணி கொண்டவையாகும்.

குழந்தை மருத்துவர்கள்

குழந்தைப்பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிப்பதில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் குழந்தை மருத்துவர்கள் (paediatricians) எனப்படுவர். பெரும்பான்மைக் குழந்தைகள் பிறக்கும் போது குழந்தைமருத்துவர் ஒருவரால் சோதிக்கப்படும். காணப்படக் கூடிய எந்தப் பிரச்சினைகளையும் குழந்தைமருத்துவர் கவனித்து, அனைத்துப் பகுதிகளிலும் குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணிப்பதில் உதவுவார்.

சமூகப் பணியாளர்கள்

புதிதாய்ப் பிறந்த குழந்தைக்கு செவிமடுக்கும் பிரச்சினை இருக்கிறது எனக் கண்டறியப்பட்ட பிறகு குடும்பத்தினரது மனநிலை மற்றும் சமூகத்தினருடன் அவர்களது உறவு நிலை ஆகியன நலமாய் இருக்க வேண்டும் என்ற கரிசனை கொண்டவர்கள் SWIS-H சமூகப் பணியாளர்கள். குடும்பங்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மதிப்பீடு செய்தல், ஆலோசனை வழங்குதல், கல்வி, தகவல் மற்றும் சேவைகளை அணுகுவதில் உதவுதல் ஆகிய விடயங்களில் சமூக சேவகர்களால் குடும்பங்களுடன் சேர்ந்து பணியாற்ற இயலும்.

பேச்சு மருத்துவர்

குழந்தைகள் மற்றும் வளர்ந்த குழந்தைகள் ஆகியோரது பேச்சுத் தொடர்பாடல் முறைகளை மதிப்பிடு செய்வதில் பயிற்சி பெற்றவர்கள் பேச்சு மருத்துவர்கள் ஆவர். குழந்தையின் பேச்சு சாதாரணமான முறையில் வளர்ச்சியடைகிறதா என்பது குறித்து இவர்களால் அறிவுரை வழங்க இயலும். குழந்தையின் பேச்சு மற்றும் மொழித் திறன்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்த பெற்றோருக்கான திட்டங்களையும் பேச்சு மருத்துவர் நிர்வகிப்பார்.

காது கேளாதோர் அல்லது காது கேட்கும் குறையுள்ளோர் ஆகியோருக்கான ஆசிரியர்கள்

காது கேளாதோருக்கான ஆசிரியர் சாதாரண ஆசிரியப் பயிற்சி பெற்றவர், மற்றும் அதற்குப் பிறகு செவித் திறன் இழப்புள்ள குழந்தைகளுக்கும், சிறுவர்,சிறுமியருக்கும் உதவுவதில் மேலதிகப் பயிற்சி பெற்றவர் ஆவார். புதிதாய்க் குறை கண்டுபிடிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவுவதற்கென காது கேளாக் குழந்தைகளுக்கான வெவ்வேறு முற்பட்ட தலையீட்டுத் திட்டங்கள் (early intervention programs) அனைத்திலும் 'காது கேளாதோருக்கான ஆசிரியர்கள்' உண்டு.

செவித்திறன் இழப்பின் வகைகள்

காது எப்படி வேலை செய்கிறது



ஆஸ்திரேலிய செவிமடுப்புச் சேவை Australian Hearing www.hearing.com.au

காதின் அமைப்பும் அதன் வேலையும்

செவிமடுப்பு (hearing) என்பது மனித உடலின் மிகச் சிக்கலான அமைப்புக்களில் ஒன்றாகும்.

ஒரு தொடர்நிகழ்ச்சியின் (chain reaction) வழியாக ஒலி அலைகளை மின் துடிப்புகளாக (electrical impulses) காது மாற்றுகிறது.

இதற்குப் பிறகு இந்த மின் துடிப்புகளை குறிப்பிட்ட ஒலிகளாக மூளை அடையாளம் காணுகிறது.

வெளிக் காது

வெளிக் காதில் 'பின்னா' எனப்படும் (பார்வையில் படும்) பகுதியும், செவிப்பாதை (ear canal) யும் அடங்கும். ஒலி செவிப்பாதை வழியே பயணித்து செவிப்பறையை அதிர வைக்கிறது.

மத்திய செவி

மத்திய செவியில் செவிப்பறை, 'ஆசிக்கில்ஸ்' (ossicles) எனப்படும் மூன்று சிறு எலும்புகள் மற்றும் யூஸ்டேியன் குழாய் (eustachian tube) ஆகியவை உள்ளன. செவிப்பறைக்கு வெளியே உள்ள காற்றழுத்தமும், மத்திய செவிக்கு உள் இருக்கும் காற்றழுத்தமும் ஒரே மாதிரியாக இருக்குமாறு யூஸ்டேியன் குழாய் பார்த்துக் கொள்கிறது.

செவிப் பாதை வழியாக ஒலி செல்லும் போது செவிப்பறையை இது அதிரச் செய்கிறது, மற்றும் இதனால் 'ஆசிக்கில்ஸ்' எனப்படும் சிறு எலும்புகளும் அசைகின்றன. 'காச்லீ' (cochlea) எனப்படும் அமைப்பிற்குள் செல்லும் சவ்வு ஒன்றினை 'ஸ்டேப்ஸ்' (stapes) என்று சொல்லப்படும் கடைசியில் உள்ள சிறு எலும்பு அழுத்துகிறது. 'காச்லீ' உள் காதுக்குள் காணப்படும்.

உள் காது

காது கேட்கும் திறன் பற்றிப் பேசும் போது உள் காதில் உள்ள மிக முக்கியமான பகுதிகள் 'காச்லீ' - யும் 'காச்லீ' நரம்பு (cochlear nerve) ம் ஆகும். 'காச்லீ' என்பது நுண்ணிய உரோம உயிரணுக்களையும், திரவங்களையும் கொண்ட சிக்கலான அமைப்பாகும். ஒலி ஏற்படுத்தப்படும் போது உரோம உயிரணுக்கள் எதிர்ச்செயல் புரிந்து 'காச்லீ' நரம்பு மூலம் நரம்புத் துடிப்புகளை மூளைக்கு அனுப்பும். மூளை இச் செய்தியைப் பெறும் போது ஏதோ சத்தம் கேட்பதை நாம் அறிகிறோம்.

செவித்திறன் இழப்பின் வகைகள்

காதின் எந்தப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து உங்கள் குழந்தைக்கு ஏற்பட்டுள்ள செவித்திறன் இழப்பின் வகை அமையும். மூன்று வகைகள் உள்ளன. கடத்தும் திறனிழப்பு, நரம்புணர்வு இழப்பு மற்றும் வேறுபட்ட காரணங்களால் ஏற்படும் இழப்பு

ஒலி கடத்தும் திறனிழப்பு

வெளி அல்லது மத்திய செவிக்குள் பிரச்சினை இருக்கும் காரணத்தால் காதின் உட்பகுதிக்குள் ஒலி வேகமாய்ச் சென்று அடைய முடியாததால் 'ஒலி கடத்தும் திறனிழப்பு' (conductive loss) ஏற்படுகிறது

காது, மூக்கு, தொண்டை மருத்துவர் (Ear, Nose and Throat specialist) ஒருவரால் 'ஒலி கடத்தும் திறனிழப்' - பிற்கு சிகிச்சையளிக்க இயலும். பெரும்பாலும் தற்காலிகமான 'ஒலி கடத்தும் திறனிழப்'பின் சில உதாரணங்கள்:

- செவிப் பாதையில் மெழுகினால் ஏற்பட்டுள்ள அடைப்பு
- 'ஒடைடிஸ் மீடியா' (Otitis Media)
- சேதமுற்ற செவிப்பறைகள் (Perforated eardrums)

சில வேளைகளில் 'ஒலி கடத்தும் திறனிழப்பு' நிரந்தரமானதாகவும் இருக்கலாம். இதற்கான சில உதாரணங்கள்:

- உருவற்ற அல்லது இல்லாத மத்திய செவி எலும்புகள்
- செவிப்பாதை இல்லாமை

நரம்புணர்வு இழப்பு

உள் காதில் (cochlear or hearing nerve) ஏற்பட்டுள்ள சேதம் அல்லது தவறான செயல்பாடு 'நரம்புணர்வு இழப்' பிற்குக் காரணமாகும். இவ்வகைப்பட்ட செவித்திறன் இழப்பு பொதுவாய் நிரந்தரமானதாகும். இது பிறப்பிலேயே இருக்கலாம் அல்லது பிறகும் வரலாம் (உதாரணமாக, 'மெனிஞ்ஜைடிஸ்' (meningitis) போன்ற தீவிர நோய்த்தாக்கல் காரணமாக).

பிறப்பிலிருந்தே இருக்கும் செவித் திறன் இழப்பிற்கான சில காரணங்களாக பின்வருவன அமையலாம்:

- மரபுவழிக் குறைபாடுகள்
- சைடொமெகலோவைரஸ் (Cytomegalovirus (CMV)) அல்லது 'ருபெல்லா' (Rubella) போன்ற சில நோய்க்கிருமிகளுடன் ஏற்பட்ட தொடர்பினால் உண்டான சேதம்
- உரிய காலத்திற்கும் முன்பாகவே நடந்த பிறப்பினால் வரும் பிரச்சினைகள்

'ஒலி கடத்தும் திறனிழப்பு' மற்றும் 'நரம்புணர்வு இழப்பு' ஆகிய இரண்டும் கலந்த செவித்திறன் இழப்பும் உண்டாகலாம். இது 'mixed hearing loss' எனப்படும்.

செவித் திறன் இழப்பைப் புரிந்து கொள்ளல்:

"காதுகேளாமையைப் பற்றி யாருக்கும் அதிகமாய் ஒன்றும் தெரியவில்லை என்பதைப் பார்க்கும் போது எனக்கு ஒரே வெறுப்பாயிருக்கிறது- காது கேட்காத பிரச்சினையில் பல நிலைகள் உள்ளன என்பதைப் பலரும் புரிந்துகொள்வதில்லை...எல்லாமே வி' யங்களைத் தெரிந்து கொள்வதில்தான் இருக்கிறது...எனது பிள்ளைகள் பிரபல்யமாய் இருப்பதற்கு அவர்களே காரணம். என் பிள்ளைகளுக்குக் 'காது கேட்காது' என்றால் கேட்பவர் ஆச்சரியப்படுவர்."

செவித்திறன் இழப்பின் வகைகள்

ஒரு பக்க நிரந்தர செவித்திறன் இழப்பு

‘ஒரு பக்க நிரந்தர செவித்திறன் இழப்பு’ என்றால் என்ன?

‘ஒரு பக்க நிரந்தர செவித்திறன் இழப்பு’ என்பது ஒரு காதினை மட்டும் பாதிக்கும். பாதிக்கப்பட்ட பக்கத்தில் இது சிறிதளவான அல்லது முற்றிலுமான செவித்திறன் இழப்பினை ஏற்படுத்தலாம்.

‘ஒரு பக்க நிரந்தர செவித்திறன் இழப்பு’ க்கான காரணங்கள்

சில குழந்தைகள் ஒருபக்க செவித்திறனிழப்புடன் (மரபு வழிப்பட்ட) பிறக்கின்றனர். சில வேளைகளில், இந்த செவித்திறன் இழப்பு பிற்காலத்தில் ஏற்படுகிறது.

பிறப்பிலேயே இது இருப்பதற்கான காரணங்களில் மரபுக் கூறுகளும், கர்ப்ப காலத்தில் இருந்த பிரச்சினைகளும் அடங்கலாம்.

புட்டாளம்மை (mumps) அல்லது ‘மெனிஞ்ஜைடிஸ்’ (meningitis) (ஒரு வகை மூளைக் காய்ச்சல்) போன்ற நோய்களுக்குப் பிறகு இப்படிப்பட்ட செவித்திறன் இழப்பு ஏற்படலாம்.

பெரும்பான்மைத் தருணங்களில் சரியான காரணம் என்ன என்பது தெரியாமலேயே உள்ளது. ஒருபக்க செவித்திறனிழப்புள்ள குழந்தைகள் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம், ஏனென்றால், எப்பொழுதாவது, இதர மருத்துவப் பிரச்சினைகளுடன இது தொடர்பு கொண்டதாய் இருக்கிறது.

இதன் விளைவுகள் என்ன?

பின்வரும் க‘டங்கள் ஒருபக்க செவித் திறன் இழப்புள்ள குழந்தைகளுக்கு இருக்கலாம்:

- சத்தமான சூழ்நிலைகளில் காது கேட்கும் திறன்
- சத்தம் எங்கிருந்து வருகிறது என அறியும் திறன்
- பாதிக்ககப்பட்ட காதின் பக்கம் இருந்து சத்தம் வரும்போது அதை அறிதல்
- சில குழந்தைகளுக்கு பேச்சு வளர்ச்சியில் கொஞ்சம் க‘டம் இருக்கலாம்

பல குழந்தைகளுக்கு பேச்சிலோ அல்லது படிப்பு சம்பந்தப்பட்ட சாதனைகளிலோ எந்தப் பிரச்சினையுமே இல்லை என்பதை கருத்தில் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

ஒரு பக்க செவித்திறன் இழப்பு:

இதைக் கண்டுபிடிக்கும் முறை குறித்து-

“அவனுக்கு ஒரு பக்கம் காது கேட்கும் என்பதைச் செவிஒலி நிபுணர் வலியுறுத்திச் சொல்வதாகவே தோன்றினாலும், எங்களுக்கு என்னவோ ‘அவனுக்கு ஒரு பக்கம் காது கேட்காது,’ என்று சொல்வது போலத்தான் இருந்தது. நாங்கள் அப்படியே நொடிந்து போனோம், எதிர்காலத்தைப் பற்றி ஒரே பயம்...? காது கேளாமையைப் பற்றிய எங்களது முதல் அனுபவம் இது...என்ன நடக்கும் என்றே எங்களுக்குத் தெரியவில்லை.”

செவித்திறன் இழப்பின் வகைகள்

செவிமடுப்பு உதவித் திட்டம்

- அடுத்த செவிக்கு கேட்கும் திறன் இருக்கும் என நினைத்தால், ஒருபக்க செவித் திறன் இழப்பிற்குச் சிகிச்சையாக செவிமடுப்பு சாதனம் பொருத்துவதுதான் மிகப் பொருத்தமான வழி என்று சொல்வதற்கான ஆதாரம் இல்லை.
- காது கேட்கும் திறன் இழப்பு சுமாரானதாக இருந்தால் இப்படி இருக்கத்தான் வாய்ப்பு உள்ளது. செவிஒலிஇயல் நிபுணருடன் ஆலோசித்த பிறகு இது பற்றி முடிவு எடுக்கலாம், மற்றும் சிறிது காலத்தில் முடிவு எடுக்க வேண்டியிருக்கலாம்.
- இப்போது எடுக்கும் முடிவை நீங்கள் தாராளமாக பிறகு மாற்றிக் கொள்ளலாம்.
- உங்கள் குழந்தைக்கு வயதாகும் போது காது கேட்க ஒத்தாசை செய்யும் சில சாதனங்கள் உதவலாம், உதாரணமாக ஒலி பெருக்கும் சாதனங்கள் (sound field amplification systems).

இந்த நிலையைக் கண்காணித்து வருவது ஏன் அவசியம்?

- குறைந்த எண்ணிக்கையுள்ள சிலருக்கு ஒரு பக்க செவித்திறன் இழப்பு இருபக்க செவித்ததிறன் இழப்பாக மாறலாம். எனவே, எந்த அளவுக்குக் காது கேட்கிறது என்று தொடர்ந்து தவறாமல் கண்காணித்து வருவது மிக அவசியம்.
- உங்கள் குழந்தைக்குக் காதில் நோய்ப்பரவல் இருந்தால் மருத்துவ ஆலாசனையை உடனே நாடுங்கள். நல்ல காதில் ஏற்படும் நோய்ப்பரவல் காது கேட்கும் திறன் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.
- குழந்தைக்குக் காது சரியாகக் கேட்கவில்லை என்பதைக் காட்டும் அறிகுறிகளைப் பொதுவாகப் பெற்றோரே முதலில் காண்பர். உங்கள் குழந்தையின் எதிர்ச் செயல்களில் மாற்றம் இருப்பதாகத் தோன்றினால் உங்கள் குழந்தையின் காதுகளுக்கான சோதனைகளை உடனே மேற்கொள்ளுங்கள்.
- மொழி வளர்ச்சியில் உங்கள் குழந்தை முன்னேற்றம் காட்டும் கட்டங்களைக் கவனித்து வாருங்கள். உங்கள் குழந்தையின் மொழி வளர்ச்சியை நாளேடு ஒன்றில் குறித்து வைத்து, பொதுவான மொழி வளர்ச்சி நிலைகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பா ருங்கள். உங்கள் குழந்தையிடம் முன்னேற்றம் காணப்படவில்லை என்றால் தகுந்த தொழிலர்க (professionals) ளது உதவியை நாடுங்கள்.

யுடிழரவ ளவசயவநபநைள — நீங்கள் கையாளும் யுக்திகள் குறித்து -

“செவிமடுப்புக் குறையுள்ள குழந்தைகளுக்கான விளையாட்டுக் குழு ஒன்றிற்கு எங்கள் மகன் போகிறான்...மற்றும் பெற்றோருக்கான தகவல் கருத்தரங்குகளுக்கும் நாங்கள் போயிருக்கிறோம்... செவிஒலி இயல் நிபுணர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் நாங்கள் எந்த அளவிற்குப் பேசுகிறோமோ அந்த அளவிற்கு எங்கள் மகனுக்குப் பிறகு அவன் வளரும்போது பயன்படக் கூடிய யுக்திகளை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். எதிர்காலத்தில் எங்கள் மகனுக்கு நாங்கள் எப்படியெல்லாம் ஆதரவாயிருக்கலாம் என்று நாங்கள் கற்று வருகிறோம்.”

மற்றவருக்கு விளக்கப்படுத்துவது குறித்து

“மற்ற பெற்றோர்கள் அவனுக்கு ஏன் உதவி செய்யவில்லை என்று கேட்கும் போதும், அவனது ஒருபக்க செவித்திறன் இழப்பு என்பது ஒரு ‘பெரிய வி‘யம்’ ஒன்றும் அல்ல என சொல்லும் போதும் மிகவும் க‘டமாயிருக்கிறது. சில மருத்துவர்களின் போக்கும் அப்படித்தானோ...? மற்றவர்கள் அவனுக்குக் காது கேட்பதில் குறையில்லை எனச் சொல்லும் போது எங்கள் மகனுக்கு ஆதரவாய்ப் பேச வேண்டும் என என் மனைவி கருதுகிறாள்.”

செவித்திறன் இழப்பின் வகைகள்

ஆடிட்டரி நியூரோபதி ஸ்பெக்ட்ரம் டிஸ்ஆர்டர் (ANSD)

இன்னொரு வகையான செவித்திறன் இழப்பு 'ஆடிட்டரி நியூரோபதி ஸ்பெக்ட்ரம் டிஸ்ஆர்டர்'(ANSD) என்று அழைக்கப்படுகிறது.

செவிச் சுருள்வளை வரைக்கும் ஒலி சென்று, சுருள்வளையின் உட்புறமாக உள்ள உரோம உயிரணுக்களின் வழியாக மூளை வரைக்கும் ஒலி கடத்தப்படுவதில் பிரச்சினை ஏற்படும்போது 'ANSD' கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

கிட்டத்தட்ட பத்து குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு கணிசமான அளவில் செவிட்டுத்தன்மையை உண்டாக்கும் 'ANSD' கோளாறு ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

'ANSD' கோளாறு உள்ளவர்களுக்கு சாதாரண அளவிலிருந்து மிகவும் அதிகமான அளவு வரைக்கும் செவித்திறன் இழப்பு இருக்கும். குழந்தைக்கு எவ்வளவு நன்றாகக் காது கேட்கும் என்பதை ABR சோதனையிலுள்ள செவித்திறன் அளவுகள் சரியாகக் காண்பிக்காது. ABR-சோதனையில் தெரியும் அளவுகளை விட குழந்தைக்கு செவித்திறன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். குழந்தைக்கு ஆறு மாதம் ஆனதும் செய்யப்படும் 'நடத்தைமுறை செவித்திறன் சோதனைகள்' (Behavioural hearing tests) குழந்தைக்கு எவ்வளவு நன்றாகக் காது கேட்கும் என்பதைப் பற்றிய அதி துல்லியமான தகவல்களைத் தரக்கூடும்.

'ANSD' கோளாறு எப்படி ஏற்படுகிறது?

'ANSD' கோளாறு ஏற்படுவதற்கான சில காரணங்களில் கீழ்வருவன உள்ளடங்கலாம்:

- காதின் சுருள்வளைக்குள் இருக்கும் உட்புற உரோம உயிரணுக்களில் ஏற்பட்டுள்ள சிதைவு
- உட்புற உரோம உயிரணுக்களுக்கும், நரம்பிற்கும் இடையேயான இணைப்பில் உள்ள கோளாறு
- செவித்திறன் நரம்பின் குறை வளர்ச்சி அல்லது அதில் ஏற்பட்டுள்ள சிதைவு
- சில தருணங்களில், செவிப்புலன் உறுப்புகள் இன்னும் முதிர்ச்சி அடையாமல் இருக்கலாம்

ஆபத்துக் கூறுகள்

கீழ்வரும் ஆபத்துக்கூறுகள் உள்ள நோயாளிகளுக்கு இது போன்ற பரிசோதனை முடிவுகள் வரலாம்:

- குறைப் பிரசவம்
- மூச்சுத்திணறல்
- ஹைப்பர்பைலிரூபினேமியா (இரத்தத்தில் பித்த நீர் அதிகம் கலந்துள்ள நிலை)
- குடும்ப வரலாறும் அடிப்படைக் காரணமாக இருக்கலாம்
- இனந்தெரியாத காரணம்

'ANSD' கோளாறின் விளைவுகள் என்ன?

- வெவ்வேறு அளவுகளில் ஏற்படும் செவித்திறன் இழப்பு
- செவித்திறன் இழப்பில் ஏற்ற இறக்கம்
- ஒருவரது பேச்சைப் தெளிவாகப் புரிந்துகொள்வதில் சிரமங்கள் இருக்கலாம்

'ANSD' கோளாறை எப்படி சமாளிக்கலாம்?

காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துக் குழந்தைகளையும் போல, 'ANSD' கோளாறு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள குழந்தையை எப்படி நிர்வகிப்பது என்பதைப் பற்றிய முடிவை குழந்தையின் சுகாதாரக் கவனிப்பிற்குப் பொறுப்பாயுள்ள அணியினரது உதவியுடன் பெற்றோர்களே மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்குமென தனியாக உருவாக்கப்பட்ட திட்டம் 'ANSD' கோளாறு உள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

குறிப்பிட்ட ஒரு காலத்திற்கென வெவ்வேறு திட்டங்களைக் கையில் வைத்திருப்பது நலமாக இருக்கலாம், ஏனெனில் தேவைப்படும்போது ஒரு திட்டத்தை விட்டுவிட்டு வேறு திட்டத்தைப் பின்பற்ற இது வசதியாக இருக்கும். உங்களுடைய குழந்தைக்காக, கீழ் வருவனவற்றை நீங்கள் கருத்தில் கொள்ளலாம்:

- செவிமடுப்புக் கருவிகள்
- செவிச்சுருள் பொருத்துதல் (Cochlear implantation)
- முன்கூட்டிய தலையீட்டுத் திட்டங்கள் (Early intervention programs)

'ANSD' கோளாறால் உங்கள் பிள்ளையின் மீது என்ன தாக்கம் ஏற்படும் என்று இந்த ஆரம்ப நிலையில் எம்மால் முன் கூட்டியே சொல்ல இயலாது, ஆனாலும் பெற்றோர்கள் மற்றும் தொழில்முறை நிபுணர்களிடமிருந்து பெறப்படும் சோதனை முடிவுகள் மற்றும் அவதானிப்புகள் உங்கள் குழந்தைக்கு ஏற்ற வழிமுறையைத் தீர்மானிப்பதில் உதவியாக இருக்கும்.

முக்கியக் குறிப்புகள்

செவித் திறன் நரம்பின் செயல்பாடு (Auditory Brainstem Response (ABR)) இல்லாமல் இருப்பதோ அல்லது அசாதாரணமாக இருப்பதோ ஆழ்ந்த செவித்திறன் இழப்பை (profound hearing loss) த்தான் குறிக்கும் என்று அர்த்தம் அல்ல. இருப்பினும், இதற்காகத் தேவைப்படும் உதவி அல்லது தலையீடு எப்போதுமே சுலபமானதாக இருக்காது.

AN/AD உள்ள பல குழந்தைகளால் தமது காது கேட்கும் திறனை சிறப்பாகப் பயன்படுத்த இயலும்.

இந்த கட்டத்தில் AN/AD -யின் தாக்கம் குழந்தை மீது எப்படியிருக்கும் என முன்கூட்டியே சொல்ல இயலாது. ஆனாலும், சோதனை முடிவுகளும், பெற்றோர்கள் மற்றும் இதர மருத்துவத் தொழிலர்களால் கவனிக்கப்படும் விடயங்களும் உங்கள் குழந்தைக்குத் தேவைப்படும் சிறப்பான வழியைத் தீர்மானிப்பதில் உதவும்.

செவித்திறன் இழப்பின் வகைகள்

செவித்திறன் இழப்பின் அளவு அல்லது தீவிரத் தன்மை

பேச்சுத் திறன் மற்றும் பேச்சு மொழியின் வளர்ச்சிக்கு காது கேட்கும் திறன் மிக இன்றியமையாததாகும். குழங்தைகளின் காது கேட்கும் திறன் இழப்பினை முதலிலேயே கண்டுபிடிப்பதும், இததற்கான தகுந்த தலையீடு அல்லது.்மற்றும் சிகிச்சையும் ஏற்படக்கூடிய பேச்சு மற்றும் மொழிப் பிரச்சினைகளைக் குறைக்க உதவும்.

உங்கள் குழந்தைக்குக் காது கேட்பதில் பிரச்சினை இருப்பின், எந்த அளவுக்கு இழப்பு உள்ளது என்றும், இழப்பு எந்த வகைப்பட்டது என்றும் எங்களுக்குத் தெரிய வேண்டும்.

செவித் திறன் இழப்பில் சுமாரான அளவிலிருந்து, தீவிரமான நிலை வரை பல அளவுநிலைகள் உள்ளன. இந்த இழப்பின் அளவு குழந்தையின் வளர்ச்சியின் மீது ஏற்படவல்ல விளைவுகளுடன் சம்பந்தப்பட்டதாகும்.

பின்வரும் அட்டவணையில் வெவ்வேறு அளவுகளில் உள்ள செவித்திறன் இழப்புகள் குழந்தையின் காது கேட்கும் திறன் மீது ஏற்படுத்தும் விளைவுகள் காட்டப்பட்டுள்ளன.

மிதமான செவித் திறன் இழப்பு (21-45dB)

உங்கள் குழந்தைக்கு மிதமான செவித்திறன் இழப்பு இருக்குமானால் விளையாட்டுக் குழுக்களிலோ, அல்லது குடும்பத்தினர் குழுமத்திலோ காது கேட்பது அவர்களுக்குக் க‘டமாக இருக்கும், எனினும் அமைதியான சூழல்களில் அவர்களால் நன்றாகச் சமாளிக்க முடியும்.

சுமாரான செவித் திறன் இழப்பு (46-65dB)

உங்கள் குழந்தைக்கு சுமாரான (moderate) செவித்திறன் இழப்பு இருக்குமானால், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் எனப் புரிந்து கொள்வது, குறிப்பாக சத்தமான சூழல்களில், அவர்களுக்கு மிகக் கடினமாயிருக்கும். இவ்விதமான இழப்புள்ள குழந்தைகளுக்கு செவிமடுப்புக் கருவிகள் மிக முன்னதாகவே கொடுக்கப்பட வேண்டும், இல்லையேல் அவர்களது பேச்சு மற்றும் மொழிவளர்ச்சி பாதிக்கப்படும்.

தீவிர செவித்திறன் இழப்பு (66-90dB)

உங்கள் பிள்ளைக்குத் தீவிர செவித் திறன் இழப்பு இருக்குமானால், அவர்களால் சாதாரணமான உரையாடல்களைக் கேட்க இயலாது. எனவே இயற்கையாகத் தாங்களாகவே பேச இவர்கள் கற்றுக் கொள்ள மாட்டர். முடிந்தவரை சாதாரணமாக பேச்சு மற்றும் மொழி ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள செவிமடுப்பு சாதனங்களும் இதர உதவியும் இவர்களுக்குத் தேவைப்படும்.

ஆழ்ந்த செவித் திறன் இழப்பு (91dB+)

ஆழ்ந்த செவித் திறனிழப்பு உங்கள் பிள்ளைக்கு இருந்தால் மற்றவர்கள் பேசுவதை அவர்களால் கேட்க முடியாது, மற்றும் சுற்றுப்புறங்களில் கேட்கும் பெரும்பான்மையான சத்தங்களையும் அவர்களால் கேட்க முடியாது. இவ்வகைப் பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு செயற்கைக் ‘காச்லியா’ பொருத்துவது (cochlear implant) ஒரு வழியாகலாம். முடிந்தவரை சாதாரணமான முறையில் பேச்சு மற்றும் மொழி ஆகிய திறன்களை வளர்த்துக் கொள்ள இக் குழந்தைகளுக்கு உதவி தேவைப்படும்.

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

காது கேட்கும் திறன் இழப்பு இவ்வளவு விரைவாக ஏன் கண்டறியப்பட்டது?

குழந்தைகள் பிறந்த உடனேயே அவர்களுக்குக் காது கேட்கும் திறன் இழப்பு உள்ளதா என்பது கண்டறியப்பட வேண்டும் என்பதற்காகவே SWIS-H போன்ற சோதனைகள் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன. செவித்திறன் இழப்புள்ள குழந்தைகளுக்கு இச் சோதனைகள் ஆரம்ப வயதிலேயே தரப்பட வேண்டும் என்ற கருத்து பெற்றோர்களால் ஆமோதிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இது க'டமாக இருந்தாலும், விரைவாகவே இழப்பைக் கண்டறிவது குழந்தைகளுக்கு நலம் பயக்கும் என்பதைப் பெற்றோர்கள் அறிகின்றனர்.

முன்பாகவே செவித்திறன் இழப்பைக் கண்டறிவதால் என்ன நன்மை?

இழப்பினை முன்பாகவே கண்டறிவதால், மிக முக்கியமான சமயத்தில் மொழி வளர்ச்சிக்கென அவர்களுக்கு மொழி மற்றும் பேச்சுத் தொடர்பாடலுக்கான உதவியை அவர்கள் பெறும் வாய்ப்பு கிட்டுகிறது. இழப்புள்ளதாக முன்னதாகவே கண்டறியப்பட்டு தகுந்த சிகிச்சைத் தலையீடு பெற்ற குழந்தைகளின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி இன்னும் நன்றாக இருக்கும் என ஆய்வுகள் காட்டுகின்றன. கற்றுக் கொள்வதற்கும், சமூகத் தொடர்புகள் கொள்ளவும் , மனஉணர்வு நலனுக்கும் பேச்சு மூலமான அல்லது சைகை மொழி மூலமான தொடர்பாடல் இன்றியமையாததாகும்.

என் குழந்தையோ மிகவும் சிறியது... இப்படி இருக்கும் போது குழந்தைக்குக் காது கேட்கும் திறன் இழபபு உள்ளது என்று மருத்துவருக்கு எப்படி உறுதியாகத் தெரியும்?

செவித்திறன் இழப்பை அறியச் செய்யப்படும் சோதனைகள் மிகவும் நம்பகரமானவையாகும். உங்கள் குழந்தையின் காது, நரம்பு மற்றும் மூளையின் செயல்பாடுகள் (எதிர்ச்செயல்கள்) ஒரு கணினி (computer) யில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பதிவுகளுக்கு என்ன அர்த்தம் என்று பார்த்து, காது கேட்பதில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிவதில் செவிஒலிஇயல் நிபுணர் (audiologist) பயிற்சி பெற்றவராவார்.

என் குழந்தை இதிலிருந்து மீளுமா?

குழந்தை வளர வளர அதன் காது கேட்கும் திறன் மாறலாம், ஆனால் குழந்தைகள் வளரும் போது அவர்களின் காது கேட்கும் திறனும் வளரும் என்பது மிகவும் அரிதாகும். செவிமடுப்பு சாதனங்கள் (hearing aids) மற்றும் 'காச்லீயர்' பொருத்தல்கள் (cochlear implants) ஆகியன உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறனை முடிந்தவரையிலும் பயன்படுத்துவதில் உதவலாம்.

"SWIS-H" திட்டத்தில் தமது குழந்தையும் இடம் பெற்றுள்ளது என இப்போதுதான் தெரியவந்துள்ள பெற்றோர்கள் முதலில் தம்மால் இயன்ற அளவுக்கு தகவல்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது எனது அறிவுரையாகும். முதலில் இது குழப்பமாகத்தான் இருக்கும், ஆனால் உங்கள் நிலை என்ன என்று நீங்கள் போகப் போக அறிவீர்கள். பெற்றோர்களுக்கென்றே உரிய உள்ளுணர்வு எங்களுக்குக் கை கொடுத்தது (இது எப்போதுமே தவறாகாது). வெளியிலிருந்து கிடைக்கக் கூடிய உதவி ஏராளம், மற்றும் நாங்கள் யாரிடமெல்லாம் பேசினோமோ அவர்களெல்லாம் மிகவும் உதவியாகவும், அன்பாகவும் இருந்தனர். எனவே உறுதியாகவும் உங்களது நம்பிக்கையைக் கைவிடாமலும் இருங்கள்.

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

இது இன்னும் மோசமான நிலையை அடையுமா? இது இன்னும் மோசமானால் எனக்கு எப்படித் தெரியும்?

சிலவகைப்பட்ட செவித்திறன் இழப்புகள் நாளாக நாளாக மோசமாகலாம். காதில் நோய்த்தாக்கல் (infection) இருக்கும் போது குழந்தையின் கேட்கும் திறன் தற்காலிகமாக இன்னும் மோசமாகலாம். உங்களுக்குச் சேவையளிப்போரின் குழு உங்கள் குழந்தையின் கேட்கும் திறனை உன்னிப்பாய்க் கவனித்து வருவர். சத்தத்திற்கு உங்கள் குழந்தை மறுபதில் செய்யவில்லையே என்று நீங்கள் கவலைப்பட்டால், இது பற்றி உங்களது செவிஒலியியல் நிபுணரிடம் கலந்து பேசுங்கள்.

என் குழந்தைக்கு சத்தங்கள் ஏதும் கேட்குமா?

உங்கள் குழந்தைக்கு எத்தனை சத்தங்கள் கேட்கும் என்பது உங்கள் குழந்தைக்கு ஏற்பட்டுள்ள இழப்பு எந்த விதம் மற்றும் இதன் தீவிரத் தன்மை என்ன என்பதைப் பொறுத்து அமையும். கேட்கும் திறன் இழப்புள்ள பெரும்பாலான குழந்தைகளால் சில ஒலிகளைக் கேட்க இயலும்.

என் குழந்தையால் எப்படி பேச்சுத் தொடர்பாடல் கொள்ள முடியும்?

குறையை முன்கூட்டியே கண்டறிவதும், தலையீட்டு உதவியளிப்பதும் உங்கள் குழந்தைக்கு நல்ல பேச்சுத் தொடர்பாடல் திறன்களை வளர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கும். பேச்சு, எழுத்து, சாடைகள், கையசைவுகள் மற்றும் உடல்அசைவுகள் போன்ற பல வழிகளை தொடர்பாடல் கொள்ள நாம் பயன்படுத்துகிறோம். உங்கள் குழந்தையும் அப்படித்தான் இருக்கும். பேச்சு அல்லது சைகை மூலமாகவோ அல்லது இவை இரண்டையும் பயன்படுத்தியோ உங்கள் குழந்தை தொடர்பாடல் கொள்ளக் கற்றுக் கொள்ளலாம். உங்கள் குழந்தைக்குத் தொடர்பாடல் கொள்வதற்கான சிறந்த வழி என்ன என்பது குறித்து விரைவான ஒரு முடிவுக்கு நீங்கள் வர வேண்டாம். பல குடும்பங்களுக்கு தமது குழந்தையையும், தமது தேவைகளையும் அவர்கள் நன்கு அறிந்த பின்னர் நாள் போகப் போகத்தான் இந்த முடிவை எடுக்க இயலும். உங்கள் குழந்தையுடன் நீங்கள் பேச்சுத் தொடர்பாடல் கொள்வதுதான் முக்கியம், எப்படி என்பது அல்ல.

என் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளுமா?

கேட்கும் திறன் இழப்புள்ள பெரும்பாலான குழந்தைகளால் பேசக் கற்றுக் கொள்ள இயலும். பேச்சைப் பயன்படுத்தி அவர்களால் எவ்வளவு நன்றாகத் தொடர்பாடல் கொள்ள முடியும் என்பது பல காரணக்கூறுகளைப் பொருத்தது, உதாரணமாக, கேட்கும் திறன் இழப்பு எவ்வளவு தீவிரமானது, காது கேட்பதில் எவ்வளவு உதவியை அவர்கள் பெறுகின்றனர் மற்றும் பேசுவதற்கான உதவி அவர்களுக்கு எந்த அளவுக்குக் கிட்டுகிறது போன்றவை.

சைகை மொழியைக் கற்றுக் கொள்ளும் தேவை எங்களுக்கு ஏற்படுமா?

பேச்சைப் பயன்படுத்தி உங்கள் குழந்தை தொடர்பாடல் கொள்ளக் கற்றுக் கொள்ளலாம் அல்லது சைகை மொழியைப் பயன்படுத்தி தொடர்பாடல் கொள்ளக் கற்றுக் கொள்ளலாம் (அல்லது இவை இரண்டின் கலப்பாகவும் இருக்கலாம்). உங்கள் குழந்தை சைகை மொழியைப் பயன்படுத்தினால், உங்கள் குழந்தையுடன் தொடர்பாடல் கொள்ளும் பொருட்டு நீங்கள் சைகை மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

குளிக்கும் போதோ அல்லது கடற்கரையிலோ தமது குழந்தையால் செவிமடுப்பு சாதனம் அல்லது "கார்ல்லீயர் பொருத்தம்" போன்றவற்றை அணிய முடியாத போது சைகை மொழி வசதியாக இருப்பதாயப் பல குடும்பத்தினர் கருதுகின்றனர். 'ஆஸ்லன்' (Australian Sign Language – ஆஸ்திரேலிய சைகை மொழி) எனும் சைகை மொழிக்கான படிப்புகளை பல அமைப்புக்கள் வழங்குகின்றன. உங்கள் பகுதியில் கிட்டும் படிப்பு வசதிகள் குறித்து உங்களது செவிஒலிஇயல் நிபுணரிடம் கேளுங்கள்.

"குழந்தைகள் வளரும் போது அவர்களது காது கேட்கும் திறனுக்கு நாம்தான் உதவியாய் இருக்க வேண்டும் - அவர்களுக்கு உதவுவதற்கு முக்கியமாய்த் தேவைப்படுவது இது குறித்த தகவல்கள்தான். எனக்கு எந்த அளவுக்கு விவரம் அதிகம் தெரிகிறதோ அந்த அளவுக்கு என் குழந்தைக்குச் சிறந்த தாயாக இருப்பதற்கு என்னால் முடிகிறது என்பதை நான் கற்று வருகிறேன்."

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

இன்னொரு மருத்துவரது கருத்தை நான் நாடலாமா?

உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் குறித்த இரண்டாவது கருத்தினை நீங்கள் எப்போதும் நாடலாம். இரண்டாவது கருத்தினை நீங்கள் எப்படி நாடலாம் என்பது குறித்து உங்களது பொது மருத்துவ (GP) ரோ அல்லது 'முற்கால குழந்தைப்பருவ சுகாதார மருத்துவநிலைய' (Early Childhood Health Clinic)மோ உங்களுக்கு அறிவுரை வழங்கலாம். முதல் மதிப்பீட்டின் போது செய்யப்பட்ட சோதனைகள் மிகத் துல்லியமானவை, எனவே இரண்டாம் கருத்தின் முடிவுகளும் முதல் சோதனை முடிவுகளைப் போன்றே இருக்கும் என்பதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம்.

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஏற்ற முற்பட்ட தடுப்புச் சேவை என்ன என்பது போன்ற உங்களுக்கு அறிவுரை தேவைப்படக்கூடிய பல வி'யங்கள் உள்ளன. எத்தனை விதமான வழிகள் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதோ அந்த அளவுக்கு உங்கள் குழந்தையின் செவிமடுப்புத் திறன் இழப்பினை சமாளிக்கும் நம்பிக்கை உங்களுக்கு அதிகமாக இருக்கும்.

காது கேட்கும் திறன் இழப்பு என் குழந்தைக்கு ஏன் ஏற்பட்டது?

ஒரு குழந்தையின் காது கேட்கும் திறன் இழப்பிற்குப் பல காரணங்கள் உள்ளன. மரபு வழியோ, உங்கள் குழந்தைக்கு ஏற்பட்டிருந்த நோயோ அல்லது பிறப்பிற்கு முன் குழந்தை வளர்ந்த விதமோ செவித் திறன் இழப்பிற்குக் காரணமாகலாம். பெரும்பான்மையான வேளைகளில் குழந்தையின் காது கேட்கும் திறன் இழப்பிற்கு வெளிப்படையான காரணம் ஏதுமில்லை. உங்கள் குழந்தைக்கு இந்த இழப்பு ஏன் ஏற்பட்டது என்பது குறித்த மேலதிகத் தகவல்களை உங்களது குழந்தை மருத்துவரால் அளிக்க இயலும்.

வேறு எந்த சோதனைகளை மேற்கொள்ளலாம்?

உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பு குறித்து மேலதிகத் தகவல் பெற நீங்கள் விரும்பினால் வேறு பல சோதனைகளுக்கு உங்கள் குழந்தைமருத்துவரால் பரிந்துரைக்க இயலும். செவித் திறன் இழப்பிற்கு என்ன காரணம் என்று இந்த சோதனைகளால் காட்ட இயலலாம். குடும்பத்தின் இதர உறுப்பினர்களும் தங்களது காது கேட்கும் திறனைச் சோதித்துக் கொள்ள வேண்டும் என்றும் சில வேளைகளில் சிபாரிசு செய்யப்படுகிறது.

வேறு ஏதாவது கோளாறு இருக்கிறது என மருத்துவர் கண்டுபிடிப்பாரா?

சில குழந்தைகள் வி'யத்தில் காது கேட்கும் பிரச்சினையானது 'பிளவுற்ற அண்ணம்' (cleft palate), இருதயப் பிரச்சினைகள், மற்றும் சில அறிகுறிகள் (syndromes) ஆகியவற்றுடன் தொடர்புடையதாய்க் காணப்படுகிறது. ஆனால் பெரும்பாலான வேளைகளில், செவித் திறன் இழப்பு கண்டுபிடிக்கப்படும் முன்னரே, பெற்றோருக்கு இது பற்றித் தெரிந்திருக்கும். உங்கள் குழந்தையின் உடல்நலம் குறித்த அனைத்து விடயங்கள், உங்கள் குழந்தையின் வளர்ச்சி ஆகியன குறித்து உங்கள் குழந்தை மருத்துவர் உங்களுடன் கலந்து பேசுவார்.

நான் இன்னொரு குழந்தை பெற்றுக் கொண்டால் அதற்கும் செவித்திறன் இழப்பு இருக்குமா?

உங்கள் குழந்தையின் காது கேட்கும் சக்தி குறைவிற்கு மரபுத்தன்மை காரணமாக இருந்தால் இன்னொரு குழந்தைக்கும் செவிமடுப்புத் திறன் இழப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். இதுபற்றி உங்களுக்குக் கவலை இருந்தால் மரபுத்தன்மை குறித்த ஆலோசனை-அறிவுரையை நீங்கள் நாட வேண்டும்.

'காது கேட்கும் திறன் பாதிப்பு' மற்றும் 'காது கேளாமை' ஆகிய இரண்டிற்கும் இடையே என்ன வித்தியாசம்?

'காது கேட்கும் திறன் பாதிப்பு', 'காது கேளாமை', 'மந்தமான செவி' 'செவித் திறனிழப்பு' ஆகிய அனைத்துமே பலவிதமான ஒலிகளைத் தெளிவாகக் கேட்பதில் க'டங்கள் உள்ளவர்களைக் குறிப்பிடுவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக, 'காது கேட்கும் திறன் பாதிப்பு' மற்றும் 'மந்தமான செவி' உள்ளவர்களால் (ஒலிபெருக்கிக் கருவிகள் அல்லது 'காச்லீயர் பொருத்தங்கள்' (cochlear implants) ஆகியவற்றின் உதவியுடன்) மற்றவருடன் தொடர்பாடல் கொள்வதற்காகத் தமது காது கேட்கும் திறனைப் பிரதானமாய்ப் பயன்படுத்த முடியும்.

செவிமடுப்பு சாதனங்களை என் குழந்தை நிரந்தரமாகப் பயன்படுத்த வேண்டியிருக்குமா?

தமது செவி மடுக்கும் திறனை நல்லமுறையில் பயன்படுத்த செவிமடுப்பு சாதனங்கள் உங்கள் குழந்தைக்கு உதவும். ஆஸ்திரேலியச் செவித்திறன் சேவை *(Australian Hearing)* யின் செவிஒலியியல் நிபுணர் இது குறித்து உங்களுடன் மேலும் பேசுவார்.

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்



'காச்லீயர் பொருத்தல்' (cochlear implant) பயனுள்ளதாய் இருக்குமா?

'தீவிர' மான மற்றும் 'ஆழ்ந்த' செவித்திறன் இழப்புள்ள குழந்தைகளுக்கும், செவிமடுப்பு சாதனங்களால் குறைந்த பயனே பெறும் குழந்தைகளுக்கும் 'காச்லீயர் பொருத்துதல்' (cochlear implant) மிகவும் பயனள்ளதாய் இருக்கலாம். அனைத்து வித காது கேட்கும் திறன் இழப்புகளுக்கும் 'காச்லீயர் பொருத்தல்' (cochlear implant) ஏற்றது அல்ல, மற்றும் சிக்கலான அறுவை சிகிச்சையும், தொடர்ந்து அளிக்கப்படும் சிகிச்சையும் இதற்குத் தேவை. 'காச்லீயர் பொருத்தல்' (cochlear implant) உங்கள் குழந்தைக்கு பயனளிக்குமா இல்லையா என்று 'ஆஸ்திரேலிய செவித்திறன் சேவை' *(Australian Hearing)* - யில் உள்ள செவிஒலியியல் நிபுணர் உங்களுக்குச் சொல்லுவார் மற்றும் இந்த 'காச்லீயர்' பொருத்தும் மையம் ஒன்றிற்கும் உங்களைப் பரிந்துரை செய்வார்.

தனித் தேவைகள் பாடசாலை (special school) ஒன்றிற்கு என் பிள்ளை செல்ல வேண்டிய தேவை இருக்குமா?

செவித் திறன் இழப்புள்ள பெரும்பான்மைக் குழந்தைகள் அரசுப் பள்ளிளுக்குச் செல்வர். சில குழந்தைகளுக்கு வகுப்பறையில் மேலதிக உதவி தேவைப்படும், இன்னும் சிலருக்கு செவித்திறனிழப்புள்ள குழந்தைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள வகுப்புக்களிலும் ஈடுபாடு கொள்ளவேண்டியிருக்கும். உங்கள் குழந்தை நல்லமுறையில் படிப்பதற்கான தகுந்த உதவியைப் பெறுவதுதான் மிக முக்கியமான விடயமாகும்.

செவித்திறன் பாதிக்கப்பட்டுள்ள குழந்தையின் பெற்றோராய் நான் இருக்கும் போது என்னுடைய படிப்பு மற்றும் வேலை ஆகியவற்றை என்னால் செய்ய இயலுமா?

உங்கள் குழந்தை சிறிய வயதில் இருக்கும் போது தமது செவித்திறனைப் பயன்படுத்துவதற்கும், தொடர்பாடல் கொள்ளக் கற்றுக் கொள்வதற்கும் அதற்கு மேலதிக உதவி தேவைப்படும். இதற்கென பல இடங்களுக்குச் சென்று பலரையும் (தொழிலர்க(professionals)ளை) நீங்கள் தொடர்ந்து சந்திக்க வேண்டியிருக்கும். வீட்டிலும் உங்கள் குழந்தை கற்றுக் கொள்வதற்கென சில நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்த வேலைகளுக்காக நேரம் செலவாகும் என்பதால், உங்கள் குடும்பத்திற்கு எது முக்கியம் என்பது குறித்து நீங்கள் முடிவெடுக்க வேண்டும். சில பெற்றோர் தமது வேலையைத் தள்ளிப் போடும் அதே நேரத்தில் இன்னும் சிலருக்கு வேலைக்குத் திரும்புவது இயலக்கூடியதாய் இருக்கிறது.

பயணச் செலவுகளுக்கென எனக்குப் பண உதவி கிடைக்குமா?

தயவு செய்து 'பகுதி 7' – ஐப் பார்க்க.

வேறு எந்தெந்த உதவிகள் கிட்டும்?

தயவு செய்து 'பகுதி 7' – ஐப் பார்க்க.

"நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் விடயம் குறித்து உங்களால் முடிந்த வரைக்கும் விவரங்களைத் தேடித் தெரிந்து கொள்ளுங்கள். இது பற்றி நன்கு தெரிந்த தொழிலர்களிடம் பேசுவது, இந்த விடயம் குறித்த பிரசுரங்களைப் படிப்பது, மற்ற பெற்றோர்களுடன் தொடர்பு கொள்வது ஆகியவற்றின் மூலம் இப்படிச் செய்யலாம். ஒரே வழி எல்லோருக்கும் ஏற்றதாய் இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள் - நீங்கள் பயன்படுத்தும் வழி பயனளிக்கிறதா இல்லையா என்று நீங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும், மற்றும் உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளவும் நீங்கள் தயாராய் இருக்க வேண்டும்!"

உங்கள் பிள்ளையுடன் பேச்சுத் தொடர்பாடல் கொள்ளுதல்

பேச்சுத் தொடர்பாடல்

உங்கள் குழந்தைக்குள்ள செவித்திறன் இழப்பு முன்னனதாகவே கண்டறியப்பட்டுள்ளது. உங்கள் குழந்தை நல்ல தொடர்பாடல் திறன்களைக் கற்றுக் கொள்வதற்கு இது மிக நல்லதாகும். பேசுவதன் மூலமாகவோ, சைகை மொழி மூலமாகவோ அல்லது இரண்டையும் கலந்தோ உங்கள் குழந்தை பேச்சுத் தொடர்பாடல் கொள்ளக் கற்றுக் கொள்ளக் கூடும்.

முடிவை நீங்கள் இப்போதே எடுக்க வேண்டியதில்லை. 'நீங்கள் இதைச் செய்து ஆக வேண்டும்' என ஒன்றும் இல்லை – உங்கள் குழந்தையின் தேவைகள் என்ன மற்றும் உங்கள் குடும்பத்திற்கு எந்த வழி பொருத்தமானது என்பதைப் பொறுத்தே சிறந்த தொடர்பாடல் வழிமுறைகள் அமையும்.

பெற்றோருக்கு சில யோசனைகள்

குழந்தை பிறந்தவுடன் அதனுடன் சிறந்த முறையில் தொடர்பாடல் கொள்ளும் வழிகள்:

- ஒலி, சைகை, சாடைகள்
- முக பாவனைகள்
- குழந்தையை அணைத்துப் பிடித்தல்
- குழந்தையை அன்பாய்க் கட்டிப்பிடித்தல்
- தொட்டு விளையாடுதல்
- வேடிக்கையான முக பாவனைகளைச் செய்தல்
- குழந்தையின் கண்களில் உற்று நோக்கல்

குழந்தைகள் எப்படித் தொடர்பாடல் கொள்கின்றன?

- புன்னகை புரிதல் - 'எனக்கு ஒரே மகிழ்ச்சி' 'விளையாடலாமா?'
- அழுகை – 'எனக்குப் பசி, ஒரே ஈரமாய் இருக்கிறது, வலியாய் இருக்கிறது.'
- மகிழ்வான சத்தம் - 'எனக்கு சுகமாய் இருக்கிறது'
- கத்துதல் - 'அதைத் திரும்பச் செய்!'
- வாய் மூலம் சொல்லுதல்
- சுட்டிக் காட்டுதல் மற்றும் எட்டுதல் -- 'எனக்கு அது வேண்டும்.'

குழந்தையின் கவனத்தை உங்கள் முகத்தை நோக்கித் திருப்புங்கள்

- பேச்சுக் கொடுப்பது குழந்தையின் கவனத்தை உங்கள் முகத்தை நோக்கித் திருப்பும். உங்கள் உதடுகளின் அசைவைக் கவனிக்கவும் அல்லது பேசக் கற்றுக்கொள்ளவும் குழந்தைக்கு இது உதவும்.
- 20 அல்லது 25 சென்டி மீட்டர் தூரத்திலிருந்து குழந்தையின் முகத்தைப் பாருங்கள் - குழந்தை உங்களைப் பார்க்க ஏற்ற தூரம் இதுதான்.
- சைகை மொழியைப் பயன்படுத்த வேண்டுமென நீங்கள் முடிவு செய்தாலும், குழந்தை உங்கள் முகத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் பேசும் முன்பாக குழந்தையின் கவனத்தை உங்கள் பக்கம் திருப்புங்கள்.

- கைகளையும் உடம்பையும் அசைத்துப் பேசுங்கள், அப்போதுதான் நீங்கள் குழந்தையிடம் பேசுகிறீர்கள் என்று அதற்குத் தெரியும்.
- குழந்தை உங்கள் முகத்தைப் பார்க்கும்படி உற்சாகப்படுத்துங்கள் - பொம்மை ஒன்றை குழந்தையின் முகத்தின் அருகே கொண்டு செல்லுங்கள், பிறகு, நீங்கள் பேச்சுக் கொடுக்கும் போது குழந்தை உங்களைப் பார்க்கும் வகையில் பொம்மையை உங்கள் முகத்தின் பக்கமாய் நகர்த்துங்கள்.
- பொம்மையைப் பற்றி ஏதும் நீங்கள் சொல்லும் முன்பு பொம்மையைத் தட்டி, அதைச் சுட்டிக் காட்டுங்கள்.
- குழந்தையின் கையையோ, காலையோ தொட்டு அதன் கண்களை உங்கள் பக்கம் திருப்பிய பிறகு உங்கள் பேச்சை ஆரம்பியுங்கள்.

அக்கம்பக்க சூழலை மாற்றல்

- குழந்தையிடம் பேசும்போது அதற்கும் உங்களுக்கும் இடையேயுள்ள தூரத்தைக் குறையுங்கள். அக்கம் பக்கம் சத்தம் அதிகமாயிருந்தால் இன்னும் அருகே வந்து பேசுங்கள்
- குழந்தை நீங்கள் சொல்வதைக் கவனிக்க வேண்டுமானால், அக்கம்பக்கம் உள்ள சத்தத்திற்கும் அப்பால் செல்லுங்கள் அல்லது சத்தத்தைக் குறையுங்கள்.
- குழந்தையின் கண்களில் நீங்கள் படும் வகையில் குழந்தையை அமர்த்துங்கள்.
- அறையில் நல்ல வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளையுடன் பேச்சுத் தொடர்பாடல் கொள்ளுதல்



குழந்தையின் சைகைகளைப் புரிந்து கொள்ளுங்கள்

- குழந்தை காட்டும் அறிகுறிகளைக் கவனித்து 'கண்கள், முகம், உடம்பு அல்லது குரல் மூலமாக குழந்தை என்னிடம் என்ன சொல்கிறது?' என்று யோசியுங்கள்.
- குழந்தையின் முக பாவனைகள், கண்பார்வை, கூவல், மழலை அல்லது உடல் அசைவு ஆகிய அறிகுறிகளைக் கவனியுங்கள் - மற்றும் தகுந்த வார்த்தைகள், உடல் அசைவுகள், பாவனைகள் அல்லது சைகைகள் ஆகியவை மூலம் குழந்தை காட்டும் அறிகுறிகளுக்குப் பதில் அளியுங்கள்.
- குழந்தை என்ன சொல்கிறதோ அதற்கும் மேலாக நீங்கள் பேச்சுக் கொடுத்து குழந்தை இன்னும் பேச உற்சாகப்படுத்துங்கள்.

அதே போல் செய்து காட்டுதல்

- உங்கள் குழந்தை உண்டாக்கும் ஒலிகளையோ அல்லது செய்யும் செயல்களையோ போலி செய்து காட்டி, குழந்தை அதைத் திரும்பச் செய்யும் வரை காத்திருங்கள்.
- செயல்களையும், வார்த்தைகளையும் செய்து அல்லது பேசிக் காட்டுங்கள்.
- உங்கள் குழந்தை காட்டும் உணர்வினை உங்கள் முகமும் பிரதிபலிக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்

ஒலி மற்றும் மொழியைப் பயன்படுத்தி குழந்தையுடன் விளையாடுதல்

- மொழியை ஒரு பிடித்தமான பொம்மையைப் போலப் பயன்படுத்துங்கள், மற்றும் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் இதைப் பாவியுங்கள்.
- இனிமையான ஒலி ஒன்று கேட்கும் போது தலையை இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் திருப்பி ஒலி எங்கிருந்து வருகிறது என அடையாளம் காண குழந்தைக்கு உதவுங்கள் - "இந்த சத்தம் எங்கிருந்து வருகிறது?" என்று கேளுங்கள்.
- கண்கட்டு விளையாட்டு மற்றும் ஒளிந்திருந்து பார்த்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடுங்கள்.
- 'ஒலி எழுப்பும் பொம்மைகள்' மற்றும் விளையாட்டுக்களைப் பயன்படுத்துங்கள்.

சுய மரியாதை

- குழந்தைக்கு உள்ள செவித்திறன் இழப்பு குறித்து உங்கள் குழந்தையிடமும், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் ஆசிரியர்களிடமும் வெளிப்படையாகப் பேசுங்கள், ஆனால் உணர்ச்சிவசமான வார்த்தைகளைத் தவிருங்கள்.
- குழந்தை சிறிய வயதாக இருக்கும் போது அது சொல்வதை நனகு கவனியுங்கள், மற்றும் குழந்தை சொல்லும் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- பேச்சுத் தொடர்பாடல் என்பதில் பல விடயங்கள் அடங்கும்: பேச்சு, உடல் அசைவு, முக பாவனைகள், தொடுதல் மற்றும் சைகைகள் ஆகியன இவற்றுள் சிலவாகும்.
- அனைவருமே தொடர்பாடல் கொள்வதில் இந்த வழிகளில் பலவற்றைச் சேர்த்துப் பயன்படுத்துகின்றனர்.
- உங்கள் குழந்தையின் பேச்சுத் தொடர்பாடல் மற்றும் மொழி கற்றல் ஆகியவற்றை அதிகரிக்கும் பொருட்டு இந்த வழிகளில் பலவற்றை முடிந்தமட்டும் பயன்படுத்துங்கள்.

உங்கள் பிள்ளையுடன் பேச்சுத் தொடர்பாடல் கொள்ளுதல்

ஒருபக்க செவித்திறன் இழப்புள்ள குழந்தைகளுக்கான யோசனைகள் - என் குழந்தைக்கு உதவ நான் எந்த வழிகளைப் பின்பற்றலாம்?

அக்கம்பக்க சூழல்களில் மாற்றம் ஏற்படுத்துதல்

- எந்தப் பக்கம் இருந்து சத்தம் வருகிறதோ அந்தப்பக்கம் குழந்தையின் நல்ல காது இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- கட்டில்கள் மற்றும் உயரமான நாற்காலிகள் போன்றவற்றை சத்தம் வரும் பக்கத்திலிருந்து வேறு பக்கம் பார்க்குமாறு வைத்து குழந்தையின் நல்ல காதில் நீங்கள் சொல்வது விழும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தையின் இருக்கையானது வாகனத்தில் (காரில்) குழந்தையின் நல்ல காதிற்கு அடுத்த பக்கம் இருக்குமாறு வையுங்கள். குழந்தையின் கேட்கும் திறன் உள்ள காதில்
- நல்ல சத்தங்கள் விழுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- அறையில் நல்ல வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தை பாடசாலைக்குப் போகும் போது, அதன் நல்ல காதில் ஒலிகள் விழும் வகையில் குழந்தை உட்காருவதை உறுதி செய்யுங்கள்.

குழந்தையிடம் தொடர்பாடல் கொள்வதற்கான வழிமுறைகள்

- குழந்தையிடம் பேசும் போது குழந்தைக்கும் உங்களுக்கும் இடையே தூரம் அதிகம் இருக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். சத்தம் அதிகம் இருக்கும் சூழல்களில் குழந்தையிடம் இன்னும் நெருங்கி வந்து பேசுங்கள்.
- குழந்தையின் கவனம் உங்கள் பக்கம் இருப்பதற்கென சத்தம் வரும் பக்கத்திலிருந்து அகன்று செல்லுங்கள், அல்லது சத்தத்தைக் குறையுங்கள்.
- நீங்கள் குழந்தையுடன் பேசும் போது அதன் நல்ல காது உங்கள் பக்கம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தை சத்தங்களைக் கேட்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், குழந்தையின் நல்ல காது சத்தம் வரும் பக்கமாகத் திரும்பியிருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- சத்தம் எங்கிருந்து வருகிறது எனக் குழந்தைக்குக் காட்டுங்கள்.
- குழந்தையின் கவனத்தை உங்கள் பக்கமாய்த் திருப்பிய பிறகு பேச ஆரம்பியுங்கள்.
- நீங்கள் பேசும் போதோ அல்லது ஒலி எழுப்பும் போதோ குழந்தையின் கண்ணில் படும்படி ஏதாவது செய்து காட்டுங்கள் குழந்தை உங்கள் உதடுகளைப் பார்க்க வேண்டும்.
- குழந்தையைக் கூப்பிடும் போது நீங்கள் எந்த அறையில் இருந்து கூப்பிடுகிறீர்கள் என்று சொல்லுங்கள்.
- ஆர்வமூட்டும் ஒலி எதனையும் நீங்கள் கேட்கும் போது, தலையை இட அல்லது வலப்பக்கம் திருப்பி ஒலி எங்கிருந்து வருகிறது எனக் கண்டுபிடிக்க உதவும் வகையில் "அந்த சத்தம் எங்கிருந்து வருகிறது?' எனக் கேளுங்கள். என்ன செய்ய முடியும்?

வீட்டில் என்ன செய்யலாம்?

- உங்கள் குழந்தை காது கொடுத்துக் கேட்கும் நிலையில் இருக்கும் போது, முடிந்தால், அக்கம்பக்கத்திலிருந்து வரும் சத்தத்தைக் குறையுங்கள்.
- நீங்கள் பேச்சு கொடுக்கும் போது குழந்தை உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தைக்கு சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதைத் தெரிந்துகொள்வதில் க'டம் இருக்கக் கூடும் என்பதால், தெருவைக் கடப்பது போன்ற சூழ்நிலைகளில் மிகவும் கவனமாக இருக்கக் கற்றுக் கொடுங்கள்.
- கேட்கும் திறனுள்ள காதினை கடும் சத்தத்தை உண்டாக்கும் கருவிகள் மற்றும் தலையில் பொருத்தும் ஒலிக்கருவிகள் (headphones) ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும்.
- கேட்கும் திறனுள்ள காதால் கேட்க முடிகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உங்கள் குழந்தையின் செவிமடுப்புத் திறனைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து வாருங்கள். எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை இந்த மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென உங்களது செவிஒலிநிபுணர் சொல்லுவார்.
- குழந்தைக்குக் காதில் நோய்த் தாக்கல் (infection) இருந்தால், அவர்களது கேட்கும் திறன் மிக மோசமாய் இருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள். உங்களது மருத்துவரை கூடிய விரைவில் பார்க்க வேண்டியது அவசியம்.
- தட்டம்மை (measles), புட்டாளம்மை (mumps) மற்றும் 'ருபெல்லா' (rubella) ஆகிய நோய்களுக்கான தடுப்பூசிகளைத் தவறாமல் போடுங்கள்.
- பகுதி 7 'பெற்றோர் ஆதரவுக் குழுக்கள்' என்பதைப் பார்க்க.

உங்கள் பிள்ளையுடன் பேச்சுத் தொடர்பாடல் கொள்ளுதல்

செவிமடுப்பு சாதனங்கள்

முன் பருவப் பள்ளியிலும் பாடசாலையிலும் என்ன செய்ய இயலும்?

- உங்கள் குழந்தைக்கு ஒரு காதில் கேட்கும் திறன் இழப்பு உள்ளது என்பதை ஆசிரியருக்குத் தெரிவியுங்கள்.
- குழந்தை ஆசிரியருககு அருகில் அல்லது நன்கு கேட்கக் கூடிய இடத்தில் அமர வேண்டும்.
- கேட்கும் திறனுள்ள காது ஆசிரியருக்கு அருகில் இருக்க வேண்டும்.
- காற்றாடிகள், குளிர் சாதனப் பெட்டிகள் ஆகிய சத்தம் எழுப்பும் கருவிகளிடமிருந்து தூரத்தில் குழந்தை அமர்த்தப்பட வேண்டும்.
- சில தருணங்களில், ஒரு FM (வானொலி மூலம் கடத்தப்படும் ஒலி) அல்லது செவிமடுப்பு சாதனம் பயனுள்ளதாய் இருக்கலாம்.

செவிமடுப்பு சாதனங்கள் தவறாமல் அணியப்படும் போது உங்கள் குழந்தைக்கு நல்ல பலன் கிட்டும்.

செவிமடுப்பு சாதனங்கள் சரியாகப் பொருத்தப்பட்டால், இது அசவுகரியமாகவோ அல்லது வலியூட்டுவதாகவோ இருக்கக் கூடாது.

ஒவ்வொரு செவிமடுப்பு சாதனமும் உங்கள் குழந்தையின் காது போன்ற வடிவம் கொண்ட காது வார்ப்படம் (ear mould) ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும். 'ஆஸ்திரேலிய செவித்திறன் சேவை' *(Australian Hearing)* -யைச் சேர்ந்த செவிஒலிஇயல் நிபுணர் அவ்வப்போது குழந்தையின் காதின் அளவுப் பதிப்பை எடுப்பார் - இதனால் வார்ப்படங்கள் (moulds) குழந்தையின் காதில் சரியாகப் பொருந்த ஏதுவாக இருக்கும்.

ஆதரிப்பு – உங்கள் குழந்தைக்கு எப்படி உதவுவது?

உங்கள் குழந்தைக்கு ஆதரிப்பு என்பது குழந்தையின் நலன்களை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வதாகும்.

தமது குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது எதுவோ அதையே பெற்றோர் விரும்புவர். குழந்தைகள் பெரியவர்களாகும் போது சந்தோ‘மாகவும், சுதந்திரமாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக நாம் அவர்களுக்கு மிக நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர விரும்புகிறோம். குழந்தைகளின் நலனுக்கு பெற்றோரே பொறுப்பாவர், மற்றும் தமது குழந்தைகளின் நலன் பெற்றோரின் மனதில் இயற்கையாகவே இருக்கும் - தமது குழந்தைகளின் நலனுக்கு அவர்கள் என்றும் ஆதரவாகவே இருப்பர்.

உங்கள் குழந்தை வளர வளர உங்களது ஆதரவு அவர்களுக்குத் தேவை எனக் காட்டும் சூழ்நிலைகள் இருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள். கீழே தரப்பட்டுள்ள யோசனைகள் நீங்கள் எப்படி உங்கள் பிள்ளைக்கு ஆதரவாக இருக்கலாம் என்பது குறித்த ஒரு ஆரம்பத்தை உங்களுக்கு அளிக்கும்.

1. உங்கள் பிள்ளைக்கான ஆதரவுக் குழுவில் நீங்கள் ஒரு முக்கிய உறுப்பினர். உங்கள் குழந்தையின் உடல்நலத்துடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து சுகாதார கவனிப்புத் தொழிலர்களுடனும் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். உங்கள் குழந்தைக்கென உள்ள குழுவினருடன் நீங்கள் சேர்ந்து பணியாற்றுவதைப் பொறுத்தே உங்கள் குழந்தைக்குக் கிட்டும் ஆதரவு வெற்றிகரமாக அமையும்.
2. செவித்திறன் இழப்பு குறித்தும், குழந்தைக்கு இதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் தெளிவான விவரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தையின் தேவைகள் குறித்து நன்கு புரிந்து கொள்வதற்காகப் படியுங்கள், மருத்துவத் தொழிலர்களுடனும் மற்றும் இதர பெற்றோரிடமும் பேசுங்கள்.
3. உங்கள் குழந்தைக்கு உதவியளிக்கும் வெவ்வேறு சேவைகள் சம்பந்தப்பட்ட வார்த்தைத் தொகுப்புகள் (terminology), மொழிவழக்கு (jargon) மற்றும் நடைமுறைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.
4. உங்களது உரிமைகள் மற்றும் திறன்கள் குறித்து நம்பிக்கையாய் இருங்கள். சிறந்த முறையில் தொடர்பாடல் கொள்வது வெற்றிக்கான திறவுகோல்களில் ஒன்றாகும் - ஏற்கனவே உங்களிடம் உள்ள திறமைகளையும், அறிவையும் பயன்படுத்துங்கள்.
5. வி‘யங்களைக் எழுத்து மூலம் குறித்து வைக்கப் பழகிக் கொள்ளுங்கள். அனைத்துக் கடிதங்கள் மற்றும் அறிக்கைகளின் பிரதிகளை வைத்திருங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் பற்றியும் குறித்து வையுங்கள்.

உங்களது குழந்தையின் தேவைகள், உங்களுக்குத் தேவைப்படும் உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்கென உள்ள அமைப்பு முறைகள் ஆகியவற்றை நீங்கள் மிகவும் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது கடினமான வேலையாக இப்போது தோன்றக்கூடும். இருப்பினும், ஈடுபாடுள்ள, விவரம் அறிந்த பெற்றோர்களே தமது பிள்ளைகளின் சிறந்த ஆதரவாளர்களாக இருக்க இயலும். உங்களது குழந்தைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக செலவழித்த நேரம் குறித்து நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள்.

“சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும் போது நமது பங்குகள் வெவ்வேறாக இருந்தாலும், எம்மைப் பொறுத்த வரை இது அனைவரும் சேர்ந்து ஆற்ற வேண்டிய பணியாகும். எம் குழந்தைகளுக்கு உதவுவதற்காக நாங்கள் தினசரி என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி நான் நன்கு அறிவேன், ஆனாலும்... அவர்கள் செய்யும் அனைத்திலும்... - இக் குழந்தைகளின் கற்றல்களிலும், அவர்களது வாழ்க்கையிலும் அவர்களுக்குத் தடைகள் ஏதும் இருக்கக்கூடாது என்பதில் நாமிருவரும் குறியாய் இருக்கிறோம், - அவர்களுக்குக் காது கேட்கும் திறனில் குறையிருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டோம், ஆமாம்...அவர்களுக்குக் குறை இருக்கிறதுதான். சந்தோ‘மாகவும், ஆரோக்கியமாகவும், இன்னும் முன்னேற வேண்டும் என்ற விருப்பமும் உள்ள குழந்தைகளை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம்.”

உங்களது குடும்பம்

சகோதர சகோதரிகள்

குடும்பத்தில் புதிதாய்க் குழந்தை பிறப்பதென்பது நல்ல நேரங்களில் கூட மற்ற சகோதர சகோதரிகளுக்குக் கடினமானதாக இருக்கலாம். ஒரு குழந்தைக்குக் காது கேட்கும் திறனிழப்பு இருக்கிறது எனக் கண்டறியப்பட்டால் மற்ற குழந்தைகள் உட்பட அனைவரையும் இது பாதிக்கும். உங்களது மூத்த குழந்தைகளுக்கு சூழ்நிலைளை எளிதாக்குவதற்கென நீங்கள் சிலவற்றைச் செய்ய இயலும்.

- உங்கள் மூத்த குழந்தைகளின வயதுக்கேற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி காது கேட்குத் திறன் இழப்பு குறித்து அவர்களுக்குச் சொல்லுங்கள். உண்மையைத் தெரிந்து கொள்வது அவர்களது ஐயத்தைப் போக்கி அவர்களது அச்சத்துக்கான காரணத்தை சரியான முறையில் காட்டும்.
- அவர்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளித்து அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்.
- ஒரு நாள் பொழுதில் ஒவ்வொரு குழந்தைக்கெனவும் தனியாக நேரம் ஒதுக்குங்கள். உங்கள் குழந்தைகளுடன் நேரம் செலவழிக்க வேண்டி நண்பர்கள் மற்றும் உறவினரது உதவியை நாடுங்கள். தாய் அல்லது தந்தையுடன் அவர்கள் செலவழிக்கும் குறுக்கிடல் இல்லாத பத்து நிமிட நேரம் அவர்களுக்குப் பெற்றோரிடமிருந்து கிடைக்கும் அன்பினை நன்கு உணர்த்தும்.
- குடும்பத்தினரையும் நண்பர்களையும் இதர குழந்தைகளைக் கவனிக்குமாறு நினைவுபடுத்துங்கள்.
- உங்களது எல்லாக் குழந்தைகளுடனும் மகிழ்வாய் இருக்க நேரம் ஒதுக்குங்கள் - அவர்கள் அனைவருக்கும் தேவைகள் உள்ளன, மற்றும் அன்பும் கவனிப்பும் தமக்குத் தேவை என குழந்தைகள் விரும்புவர்.

பாட்டன் பாட்டியருக்கு ஒரு செய்தி

குழந்தைக்குக் காது கேட்கும் திறனில் இழப்புள்ளதாகக் கண்டறியப்படும் போது பெற்றோரின் பெற்றோருக்கு இது மிகவும் வருத்தத்தைத் தரும் என நாங்கள் அறிவோம். உங்கள் பேரக் குழந்தைக்காகவும், உங்கள் பிள்ளைக்காகவும், உங்களுக்காகவும் நீங்கள் மிகவும் துயரப்படுவீர்கள். பாட்டன் பாட்டியர் தமது மகன் அல்லது மகளுக்கு அளிக்கும் உணர்வுப் பூரணமான ஆதரவு (emotional support) அவர்களது மன அழுத்தத்தைக் குறைத்து அவர்களது மனதைத் தேற்றிக் கொள்ள அவர்களுக்கு உதவும் என்பதையும் நாங்கள் அறிவோம். செவித்திறன் இழப்புள்ள குழந்தையின் பெற்றோருக்கு அவர்களது பெற்றோர்களால் அளிக்கப்படும் ஆதரவு மிகவும் உதவிகரமானதாகும்.

உங்களது மகன் அல்லது மகளின் குடும்பத்திற்கு உதவக்கூடிய நடைமுறைக்கு ஏற்ற யோசனைகள் பலவுண்டு. குழந்தையை அன்பாய்த் தொடுவது, தூக்கி வைத்திருப்பது, அமைதிப்படுத்துவது, மெதுவாய் ஆட்டுவது, பாடுவது மற்றும் பேசுவது போன்ற குழந்தையின் மீது கவனத்தைப் பொழியும் செயல்களே உங்கள் பேரப் பிள்ளைக்கு இப்போது தேவை.

சுத்தம் செய்தல், துணி துவைத்தல், சலவை செய்தல் மற்றும் கடைக்குச் செல்லுதல் போன்ற செயல்முறையான உதவிகளை சில குடும்பத்தினர் மிகவும் பாராட்டுவர். குழந்தையின் பெற்றோர்களை உங்களுக்கு வழிகாட்ட விடுங்கள், கட்டுப்பாட்டினை உங்கள் கையில் எடுத்துக் கொள்ளாதீர்கள்.

ணபுதிதாய்ப் பிறந்துள்ள உங்களது பேரக் குழந்தையையோ அல்லது அதன் உடன்பிறப்புக்களையோ நீங்கள் பார்த்துக் கொண்டால் குழந்தையின் பெற்றோருக்கு வெளியே போவதற்கும், ஓய்வாய் இருப்பதற்கும் சிறிது நேரம் கிட்டும். ஒரு மணி நேர ஓய்வு என்பது அவர்களுக்குப் புதிய தெம்பை அளித்து அவர்களது வாழ்வில் ஒரு புது நோக்கைத் தோற்றுவிக்கும்.

இதில் சம்பந்தப்பட்டுள்ள புதிய தொழில் நுட்பத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். செவிமடுப்புக் கருவிகளை எப்படிப் பொருத்துவது, அவற்றை எப்படி சோதித்துப் பார்ப்பது, பேட்டரிகளை எப்படி மாற்றுவது போன்ற விடயங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். அவை கொஞ்சம் தடுமாற்றத்தைத் தரலாம், ஆனால் சிறிது பயிற்சிக்குப் பிறகு உங்களுக்குப் பழக்கப்பட்டுவிடும்.

உங்கள் பேரக்குழந்தையை அது இருக்கும் நிலையில் அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களது சாதனைகளைப் பார்த்து இன்புறுங்கள்.

பயனளிக்காத விடயங்கள்:

கவலைப்பட வேண்டாம் என அவர்களிடம் சொல்லாதீர்கள் - ஏனெனில் இது விடயமே அல்ல - "அவன் மிகவும் சிறியவன் அவன் இதிலிருந்து மீண்டுவிடுவான் அதற்குக் கொஞ்சம் நேரம் கொடுங்கள்." செவிமடுப்பு சாதனங்களை முற்பட்டே பொருத்துவது, முற்பட்ட நேரத்திலேயே தலையீட்டுச் சிகிச்சை வழங்குவது மற்றும் அன்பும் ஆதரவும் காட்டும் குடும்பம் ஆகியவை உங்களது பேரப்பிள்ளைக்கு சிறந்த ஒரு ஆரம்பத்தினைத் தரும்.

செவித்திறன் இழப்பிற்குக் குடும்பத்தின் ஒரு பக்கத்தினரையோ அல்லது ஒரு குடும்ப உறுப்பினரையோ 'குற்றம்' சொல்வதைத் தவிருங்கள் - இதனால் பயனேதும் இல்லை மற்றும் இது மனக் க'டத்தை உண்டாக்கும்.

செவிமடுப்புத் திறன் இழப்பு குறித்த வரலாறுள்ள குடும்பங்கள் கூட குடும்பத்தில் உள்ள மிகச் சிறியவருக்கு செவித்திறன் இழப்பு இருப்பதாகக் கண்டறியப்படும் போது அதிர்ச்சி அடைகின்றனர்.

விமர்சனம் செய்வது அல்லது கருத்துரைகள் வழங்குவதைத் தவிருங்கள். தொழிலர்களிடமிருந்து உதவியையும் நல்ல தகவல்களையும் பெறும் பெற்றோர்கள் தங்கள் குடும்பத்திற்கெனப் பொதுவாக சரியான முடிவுகளையே (உங்கள் முடிவிலிருந்து வேறுபட்டிருந்தாலும் சரி) எடுப்பர்.

முற்பட்ட தடுப்பு நடவடிக்கை

குழந்தைப் பருவத்தில் முற்பட்ட தடுப்பு நடவடிக்கை ஏன் அவசியமாகிறது?

பிறப்பிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வரையிலும் உள்ள முக்கியமான காலப் பகுதியில் குழந்தையின் வளர்ச்சியை ஊக்குவித்து குடும்பங்களுக்கு உதவி செய்யும் ஒருங்கிணைக்கப்பட்ட சேவை அமைப்பு முறையே 'குழந்தைப் பருவ முற்பட்ட தடுப்பு நடவடிக்கை' என்ப தாகும்.

'குழந்தைப் பருவ முற்பட்ட தடுப்பு நடவடிக்கை' என்பது பல செயல்களையும் உள்ளடக்கிய ஒரு அணுகுமுறையாக இருத்தல் வேண்டும். செவித் திறனிழப்புள்ள குழந்தைகளுக்கென உள்ள முற்பட்ட தடுப்பு நடவடிக்கை திட்டங்கள் பொதுவாக மொழி வளர்ச்சியையே மையமாய்க் கொண்டுள்ளன. ஆனாலும், குழந்தை மற்றும் குழந்தையின் குடும்பத்தினது அறிவுப் பூர்வ, சமூகப் பூர்வ, உளப் பூர்வ மற்றும் உடல் பூர்வ வளர்ச்சி குறித்த தேவைகளையும் இவை கருத்தில் கொள்ளும்.

இச் செயல்முறைகளில் பெற்றோர்கள் ஆரம்பத்திலிருந்தே ஈடுபாடு கொண்டிருத்தல் வேண்டும். உங்கள் குழந்தைக்கு ஆதரவு வழங்கும் குழுவின் ஒரு முக்கிய அங்கத்தினராக நீங்கள் இருக்க வேண்டும். இக்குழு பெற்றோரால்.'.கவனிப்பாளரால் ஒருங்கிணைப்பு செய்யப்படும். குழந்தை மருத்துவர்கள், செவிஒலி நிபுணர்கள், செவித்திறன் இழப்புள்ளோருக்கான ஆசிரியர்கள், இதர மருத்துவர்கள், பேச்சுத் திருத்த மருத்துவர்கள் (speech therapists), சமூகப் பணியாளர்கள், அறிவுரை-ஆலோசகர்கள் மற்றும் கல்வி உளவியலாளர்கள் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறலாம். குழந்தை மற்றும் குடும்பத்தினரின் தேவைகளுக்கேற்ப இயன்மருத்துவர்கள் (physiotherapists), Occupational Therapists இன்னும் மற்றவர்கள் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெறலாம்.

முற்பட்ட தடுப்பு நடவடிக்கை என் குழந்தைக்கு ஏன் அவசியம்?

நீங்கள் தேர்ந்தெடுக்கும் தொடர்பாடல் முறை (mode of communication) எதுவாயிருப்பினும், குழந்தைக்கு ஆறு மாதங்கள் ஆவதற்கு முன்பாக எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கை உங்கள் குழந்தையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தும் மற்றும் வளர்ச்சிக்கான தடைகளைக் குறைக்கும் என்று ஆய்வுகள் காட்டியுள்ளன. குழந்தையின் செவித் திறன் இழப்பினை முன்னதாகவே கண்டறிவது நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழிகள் குறித்து கவனமாய் யோசிக்க உங்களுக்கு நேரம் அளிக்கும். நீங்கள் அவசரப்படத் தேவையில்லை, இருப்பினும், மாதக் கணக்கில் நேரம் எடுத்துக் கொள்வது சரியானதல்ல.

என் குழந்தைக்கு தகுந்த 'முற்பட்ட தடுப்பு நடவடிக்கை சேவை' எது என்று நான் எப்படி முடிவு செய்வது?

'ஆஸ்திரேலிய செவித் திறன் சேவை' (Australian Hearing) க்கு நீங்கள் முதல் முறையாகச் செல்லும் போது *CHOICES* என்ற தகவலேட்டின் பிரதி ஒன்று உங்களுக்கு வழங்கப்படும். உங்களுக்குக் கிடைக்கக் கூடிய சேவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள *CHOICES* ஒரு நல்ல ஆரம்பமாகும். ஒவ்வொரு முற்பட்ட தடுப்பு நடவடிக்கை சேவை பற்றிய விவரங்களையும், அவற்றுடன் எப்படித் தொடர்பு கொள்வது என்பதையும் இது சொல்லும். மற்றும் செவித்திறன் இழப்புள்ள குழந்தையுடன் நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் அனைத்து அம்சங்கள் குறித்தும் இது உங்களுக்குத் தகவல்கள் வழங்கும். நீங்கள் வாழும் பகுதியில் கிடைக்கும் முற்காலத் தடுப்புச் சேவைகள் குறித்து கிடைக்கக் கூடிய அனைத்துத் விவரங்களையும் கண்டறியுங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களைச் சென்று பாருங்கள் மற்றும் தகவல் சந்திப்பு (session) ஒன்றில் அமருங்கள். இதே வழிமுறைகளில் அனுபவப்பட்டுள்ள மற்ற பெற்றோரைச் சந்தியுங்கள். காது கேளாத மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டுள்ள வயது வந்தோரிடம் அவரது பெற்றோர்கள் அவர்களுக்காக எடுத்த முடிவுகள் குறித்து விவரம் தெரிந்துகொள்ளுங்கள். ஒருவர் சொல்வதை மட்டும் கேட்காதீர்கள். அறிவுரைகளுக்கு செவி கொடுங்கள், ஆனால் உங்களது உள்ளுணர்விலும், உங்களது முடிவிலும் நம்பிக்கை வையுங்கள்.

உங்களது குடும்பத்திற்கு எந்த சேவை சரியானது என்று நினைக்கிறீர்களோ அதைத் தேர்ந்தெடுங்கள் - ஒன்றுக்கும் மேற்பட்ட சேவையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். உங்களுக்கு மிகவும் சவுகரியமானதாக இவை இருக்க வேண்டும் என்று அவசியம் அல்ல. சரியான தேர்வு (choice) அல்லது தவறான தேர்வு என எதுவும் கிடையாது, மற்றும் எந்த முடிவும் நிரந்தரமானதல்ல.

முற்பட்ட தடுப்பு நடவடிக்கை

மற்ற பெற்றோர்கள் மற்றும்/ அல்லது வயதுவந்த காது கேளாதோருடன் நான் எப்படித் தொடர்பு கொள்வது?

பல வழிகள் உள்ளன:

- பெற்றோர் ஆதரவுக் குழுக்கள் (Parent Support Groups) - இத் தகவலேட்டின் பிற்பகுதியில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.
- 'நி.ச.வே மாநில காது கேளாதோர் சங்கம்' (Deaf Society of NSW) - குறிப்பாக நீங்கள் வயதுவந்த காது கேளாதோர் அல்லது செவித்திறன் பாதிப்புள்ளோரைச் சந்திக்க விரும்பினால்

SWIS-H அமைப்பைச் சேர்ந்த சமூகப் பணியாளராலும் மற்ற பெற்றோர்களுடன் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தர இயலும்.

'முற்பட்ட தடுப்பு நடவடிக்கை' சரிபார்ப்பு அட்டவணை

உங்கள் குழந்தைக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் தடுப்பு நடவடிக்கைச் சேவையைப் பற்றி நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகளை 'குழந்தையின் உடல்நலப் பதிவேட்' (Personal Health Record) டில் சேர்க்கப்பட வேண்டிய 'முற்பட்ட தடுப்பு நடவடிக்கை' சரிபார்ப்பு அட்டவணை காட்டுகிறது. உங்களுக்கும் உங்கள் குழந்தையின் தேவைகளுக்கும் ஏற்ற சரியான சேவையைக் கண்டறிவது முக்கியம். சரியான அல்லது தவறான பதில் என ஒன்றும் கிடையாது என்பதையும், உங்கள் முடிவை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

"குடும்பத்தினரும் நண்பர்களும் மிக அபாரம். முற்பட்ட தடுப்பு நடவடிக்கையானது ஒரு சமூகத்தில் சேர்ந்து செயல்படுவது போன்ற உணர்வை உங்களுக்கு ஏற்படுத்துகிறது. எனக்கு உதவி வழங்கும் குழுவினரும் மிகவும் சிறந்தவர்கள். யாராவது ஒருவர் சொல்வதில் உங்களுக்கு சம்மதம் இல்லையெனில் கோபப்பட வேண்டாம். நீங்கள் கேட்கும் விடயங்களில் எது நல்லதோ அதை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள், காது கேட்கும் திறன் பற்றிய வி'யமாகத்தான் இது இருக்க வேண்டும் என்பதல்ல. நீங்கள் ஒரு நல்ல நபர் என்ற உணர்வினை உங்களுக்கு ஏற்படுத்தக் கூடிய உதவியே மிகச் சிறந்த உதவி என்று நான் நினைக்கிறேன். உங்கள் பிள்ளைக்கேற்ற சிறந்த ஒரு பெற்றவராக உங்களை இது மாற்றும். துவைத்த துணிகளை மடித்து வைப்பது, தோட்டத்தை சீர் செய்வது, எனக்கு மிகவும் ருசியான சூப் வைத்துக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்வதில் என் அப்பா, அம்மாவுக்கு இணையே இல்லை. ஒருவரது காது கேட்கும் திறன் இழப்பிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை...இருந்தாலும் பலரையும் சந்தித்து விட்டு களைப்பாய் வீடு திரும்பும் போது இப்படிப்பட்ட உதவிகள் மிகவும் பாராட்டத்தக்கவையே."

ஆதரவு

SWIS-H **சமூகப் பணியாளர்கள்**

புதிதாய்ப் பிறந்துள்ள ஒரு குழந்தைக்கு காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறது எனக் கண்டறியப்பட்ட பிறகு குழந்தையின் குடும்பத்தினருக்கு உள்ளம் மற்றும் உணர்வு பூரணமான நலமும், சமூக நலனும் கிடைக்க வேண்டும் என்பதில் SWIS-H சமூகப் பணியாளர்கள் அக்கறை காட்டுவர். குழந்தையைக் குவியமாகவும் (child focused), குடும்பத்தினை மையமாகவும் (family centred) கொண்ட அணுகுமுறையினை இவர்கள் மேற்கொள்வர்.

சமூகப் பணியாளர் என்பவர் SWIS-H குழுவில் ஒரு உறுப்பினராவார். உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறனில் இழப்பு ஏற்பட்டுள்ளது எனக் கண்டறிந்த செவிஒலி நிபுணர் SWIS-H சமூகப்பணியாளர் ஒருவருக்கு உங்களைப் பரிந்துரைப்பார். குழந்தைக்கு உள்ள செவித்திறன் இழப்பு கண்டுபிடிக்கப்பட்ட உடனேயோ அல்லது பிறகோ சமூகப் பணியாளரை நீங்கள் சந்திக்கலாம்.

'வெஸ்ட்மெட்' –இல் உள்ள 'குழந்தைகள் மருத்துவமனை'யிலும், 'சிட்னி குழந்தைகள் மருத்துவமனை'யிலும், 'ஜான் ஹன்ட்டர் மருத்துவமனை'யிலும் SWIS-H சமூகப் பணியாளர்கள் உள்ளனர். ஒவ்வொரு மருத்துவமனையிலும் உள்ள 'சமூக சேவைத் துறை' (Department of Social Work) மூலமாக சமூகப் பணியாளருடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

கீழ்வருவன உள்ளடங்க பல வி' யங்களில் சமூக சேவகரால் உதவ இயலும்:

- உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் இழப்பு சம்பந்தமான கவனிப்பு – செவித் திறன் இழப்பு கண்டறியப்பட்டுள்ளது எனும் செய்தி மிகவும் துயரளிப்பதாய் இருக்கும். குடும்பத்தைச் சாராத மற்றவர்களுடன் இதைப் பற்றிப் பேசுவது உதவிகரமானதாகும்.
- மருத்துவமனை மற்றும் சமூகத்தில் கிடைக்கும் சேவைகளையும், தகவல்களையும் பெறுதல் - மேலதிக உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்கள் குடும்பத்திற்கேற்ற சேவைகள் மற்றும் தகவல்களை அறிந்து கொள்வதில் 'சமூகப் பணியாள'ரால் உதவ இயலும். குடும்ப உதவி சேவைகள் (family support services), வீட்டுவசதி அல்லது இதர நடைமுறையில் உதவக் கூடிய தகவல்கள், அல்லது உங்களுக்கோ, உங்கள் குழந்தைக்கோ தேவைப்படக் கூடிய சேவைகளுக்கான பரிந்துரைகள் ஆகியன இதில் அடங்கலாம்.
- குடும்பம் மற்றும் உறவுமுறைகள் குறித்த கரிசனங்கள் - செவித் திறன் இழப்பு கண்டறியப்பட்டுள்ளது எனும் செய்தி குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் பாதிக்கும்.
- குழந்தை வளர்ப்பில் ஏற்படும் க'டங்கள்
- மாற்றங்கள் மற்றும் துயரத்தை சமாளித்தல்

சேவைகளுள் அடங்குவன:

- குடும்பங்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மதிப்பீடு செய்தல்
- பெற்றோர் மற்றும் குடும்பத்தினருடன் அறிவுரை ஆலோசனை
- கல்வி மற்றும் உதவி குழுக்கள்
- சேவைகள் மற்றும் தகவல்களை எப்படிப் பெறுவது என்பது குறித்த விவரம் மற்றும் உதவி

சமூகப் பணியாளர்கள் உங்களை மருத்துவமனையில் பார்க்கலாம் அல்லது சில சூழ்நிலைகளில் உங்கள் வீட்டிற்கு வரவும் அவர்களால் இயலலாம்.

ஆதாயங்கள்

பயண உதவி

தூரமான மற்றும் ஒதுக்குப்புறமான இடங்களில் வசிப்பதால் இழப்புக்குள்ளாகும் நிலையிலுள்ள நோயுற்றோருக்கும், உள்ளூரில் கிடைக்காத சிறப்பு மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கென போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்த நிதியுதவி தேவைப்படும் நோயுற்றோருக்கும் உதவும் பயணத் தள்ளுபடித் திட்டங்கள் மற்றும் ஆன செலவைத் திருப்பியளிக்கும் திட்டங்கள் ஆகிய சேவையே 'உடல்நலத்திற்கான போக்குவரத்து' *(Transport for Health)* என்பதாகும்.

உதாரணத்திற்கு, தரகர் மூலமாக நேரடிப் போக்குவரத்து வசதியளித்தல், ஒப்பந்த ஏற்பாட்டு வசதிகள் அல்லது 'உள்ளூர் சுகாதார சேவை' (Area Health Service) -யினரால் வழங்கப்படும் நேரடிப் போக்குவரத்து வசதி போன்ற சேவைகளை 'உடல்நலத்திற்கான போக்குவரத்து' *(Transport for Health)* வழங்குகிறது. சிறப்பு மருத்துவர்கள், பல் மருத்துவர்கள், மற்றும் செவிஒலி நிபுணர்கள் ஆகியோரைப் பார்ப்பதற்காக நோயுற்றோருக்கு ஏற்படும் போக்குவரத்து செலவிற்குத் தள்ளுபடியையும் இத்திட்டம் வழங்குகிறது ('மாநிலம் தழுவிய குழந்தைப் பரிசோதனை – செவித் திறன் திட்டம்' (Statewide Infant Screening-Hearing (SWIS-H) program) மூலமாகப் பரிசோதிக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும்).

'தூரப்பகுதிகளில் வாழும் நோயுற்றோர் பயணம் மற்றும் தங்கும் இடவசதி உதவித் திட்டம்' (Isolated Patients Travel and Accommodation Assistance Scheme (IPTAAS)) மற்றும் 'மாநிலம் தழுவிய குழந்தைப் பரிசோதனை – செவித் திறன் - பயணத் திட்டம்' (Statewide Infant Screening-Hearing (SWIS-H) Travel) ஆகியவை நி.ச.வே-யின் சுகாதாரத் துறையினால் நிதியுதவி வழங்கப்படும் Transport for Health- இன் தள்ளுபடி செய்யப்பட்ட பயணத் திட்டங்களில் அடங்கும்.

ஆதரவு

ஆதாயங்கள்

‘தூரப்பகுதிகளில் வாழும் நோயுற்றோர் பயணம் மற்றும் தங்கும் இடவசதி உதவித் திட்டம்’

தொலைதூரப் பகுதிகளில் வாழ்வோர் சிறப்பு மருத்துவ சிகிச்சை வசதியைப் பெறுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு ITPAAS வடிவமைக்கப்பட்டுள்ளது. மிக அண்மையிலுள்ள சிகிச்சையளிக்கும் மருத்துவரிடமிருந்து 100 கி. மீ. தூரத்தில் (ஒரு பக்கம்) வாழும் குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

ஒரு குழந்தைக்கும், கூட வரும் ஒருவருக்கும் பேருந்து அல்லது இரயில் கட்டணத்தைத் திரும்பி வழங்குவதன் மூலமாகவும், அல்லது நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் செலவினை வழங்குவதன் மூலமாகவும் IPTAAS பயண உதவியை வழங்குகிறது. மருத்துவ அங்கீகாரம் பெறப்பட்டிருந்தாலொழிய விமானப் பயணக் கட்டணத்தை இத் திட்டம் வழங்காது. தங்குவதற்கு ஆகும் செலவுகளிலும் IPTAAS ஒத்தாசை செய்கிறது. IPTAAS முழுச் செலவினையும் திருப்பித் தராது என்பதையும், ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் வழங்கப்படும் ஆதாயத்திலிருந்தும் ‘சொந்தப் பங்களிப்பு’ (personal contribution) ஒன்று கழித்துக் கொள்ளப்படும் என்பதையும் கவனிப்பது அவசியம். சாப்பாடு போன்ற இதர அன்றாட வாழ்க்கைச் செலவுகளை IPTAAS ஈடு செய்யாது.

திருப்பப்படும் தொகையினைப் பெறுவதற்கென ரசீதுகள் அனைத்தையும் நீங்கள் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

http://www.health.nsw.gov.au/living/transport/ எனும் நி.ச.வே சுகாதாரத் துறையின் இணையதளத்திலிருந்து IPTAAS குறித்த மேலதிகத் தகவல்கள் பெறப்படலாம்.

SWIS-H பயண ஒத்தாசைத் திட்டம்

‘SWIS-H பயண ஒத்தாசைத் திட்டம்’ என்பது IPTAAS திட்டத்தைப் போன்றதேயாகும். SWIS-H திட்டத்துடன் சம்பந்தப்பட்ட செவித்திறன் மதிப்பீட்டு சோதனைக்கென உள்ள மூன்று மருத்துவக் கண்டுபிடிப்பு மையங்க (diagnostic centres) ளில் இருந்து 100 கி.மீ. தூரத்தில் (ஒரு பக்கம்) வாழும் குடும்பத்தினருக்கு SWIS-H திட்ட உதவி கிட்டும். இந்த மூன்று மையங்கள்:

- ‘வெஸ்ட்மெட்’ -இல் உள்ள ‘குழந்தைகள் மருத்துவமனை’
- ‘ஜான் ஹன்ட்டர் மருத்துவமனை’
- ‘சிட்னி குழந்தைகள் மருத்துவமனை’

உங்களது ‘உள்ளூர்ப் பகுதி சுகாதார சேவை SWIS-H ஒருங்கிணைப்பாளர்’ (Area Health Service SWIS-H Coordinator) அல்லது சமூகப் பணியாளர் SWIS-H பயணத் திட்டத்தின் மூலம் பயன் பெற உங்களுக்கு உதவுவார்.

தேசிய உடலியலாமை காப்பீட்டுத் திட்டம் National Disability Insurance Scheme (NDIS)

குழந்தைகள், இளம் வயதினர், சில அவுஸ்திரேலியப் பூர்வகுடியினர், மூப்புற்ற மற்றும் உடலியலாமையுடைய ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோர் உட்பட்ட மிதமான மற்றும் தீவிர செவித்திறன் குறையுள்ள பல வகைப்பட்டோருக்கு NDIS மூலமாக ‘செவித்திறன் சேவைகள் திட்டம்’ சேவைகளை வழங்குகிறது. இத்திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன:

- சமூக சேவைகள் கடப்பாடுகள்
- பற்றுச்சீட்டு திட்டம்

‘செவித்திறன் சேவைகள் அலுவலக’த்தினரால் இத்திட்டம் நிர்வகிக்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த மேலதிக தகவல்களுக்குச் செல்க:

http://hearingservices.gov.au

நிதிநிலை நெருக்கடி

குறிப்பிடத்தக்க நிதிநிலை நெருக்கடியில் நீங்கள் இருந்தால் தயவு செய்து உங்களது SWIS-H ஒருங்கிணைப்பாளருடனோ அல்லது சமூகப் பணியாளருடனோ பேசுங்கள். செவித் திறன் மதிப்பீட்டு சோதனைக்குச் செல்லும் முன்பாக இவரால் உங்களுக்கு நிதியுதவி வழங்க இயலலாம்.

கவனிப்பாளர் படி

காது கேட்கும் திறன் இழப்புள்ள குழந்தை இருப்பதால் ஏற்படும் அதிகப்படியான செலவுகளுக்கென நீங்கள் ‘கவனிப்பாளர் படி’ (Carer’s Allowance) ஒன்றிற்குத் தகுதியுடையவராகலாம். இந்த வழங்கீட்டிற்கு நீங்கள் எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என்பது குறித்த விவரங்களையும், அதற்கான படிவங்களையும் மருத்துவமனையிலுள்ள உங்களது சமூகப் பணியாளர் தருவார். மாறாக, 13 27 17 எனும் எண் மூலம் ‘சென்ட்டர்லிங்க்’-உடன் நீங்கள் மேலதிகத் தகவல் அல்லது பார்வை நேரம் வேண்டுமெனக் கேட்டுத் தொடர்பு கொள்ளலாம்.

பெற்றோர் மற்றும் இதர குழுக்கள்

செவித் திறனற்ற ஆஸ்திரேலியக் குழந்தைகள்

www.aussiedeafkids.org.au

ஆஸ்திரேலியாவில் வாழும் காது கேட்கும் திறன் குறைந்த அல்லது காது கேட்கும் திறனற்ற குழந்தைகளின் பெற்றோருக்கு இணையம் வாயிலான உதவிகளையும், தகவல்களையும் 'ஆஸ்திரேலிய செவித் திறனற்ற குழந்தைகள்' (Aussie Deaf Kids) எனும் அமைப்பு வழங்குகிறது.

'ACT செவித் திறனிழப்பு தகவல் மையம்'

www.actdrc.org.au

ACT சமூகத்திலிருக்கும் செவித்திறன் குறைபாடு உள்ளவர்கள், செவித்திறன் அற்றவர்கள் மற்றும் நீண்டகாலமாக செவி சம்பந்தப்பட்ட கோளாறுகளை உடையவர்கள் ஆகியோருக்கு தகவல்கள் மற்றும் பரிந்துரை சேவைகளை 'ACT செவித்திறனற்றோர் மூலவள மையம்' வழங்குகிறது.

'கேன்பரா 'செவித்திறனற்ற குழந்தைகள் சங்கம்'

www.canberradeafkids.org.au

செவித்திறன் அற்ற, மற்றும் செவித்திறன் குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆதரவளிக்கவும், தகவல்கள் வழங்கவும் 'கென்பரா செவித்திறன் இல்லா குழந்தைகள் சங்கம்' (The Canberra Deaf Children's Association (CDCA)) முயன்றுவருகிறது.

Deaf Australia

www.deafau.org.au

'அவுஸ்திரேலிய செவித்திறனற்றோர் அமைப்பு' (Deaf Australia) என்பது அவுஸ்திரேலியாவிலுள்ள செவித்திறன் அற்றோருக்கான தேசிய அளவிலான தலையாய அமைப்பாகும். 'ஆஸ்லன் சைகை மொழி' (Auslan sign language)-யைப் பாவிப்பவர்களது கருத்துக்களை இது எடுத்துரைக்கிறது.

ஆஸ்திரேலிய செவித் திறன் இழப்பு சங்கம்

தொலைபேசி: (02) 6262 7808
வுவுலு: (02) 6262 7809
தொலைநகல்: (02) 6262 7810

ஆஸ்திரேலியாவில் உள்ள அனைத்து காது கேளாதோர் மற்றும் காது கேட்கும் திறன் குறைந்தோரின் நலன்களையும் கருத்துக்களையும் 'ஆஸ்திரேலிய செவித் திறன் இழப்பு சங்கம்' (Deafness Forum of Australia) சார்புப்படுத்தும். செவித் திறனற்றற, செவித்திறன் குறைபாடுள்ள அல்லது நீடித்த செவிப் பிரச்சினையுள்ள ஆஸ்திரேலியரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கென்றே 'ஆஸ்திரேலிய செவித் திறன் இழப்பு சங்கம்' இயங்கிவருகிறது.

நி.ச.வே மாநில காது கேளாதோர் சங்கம்

தொலைபேசி: 1800 893 855
தொலைநகல்: 1800 898 333
வுவுலு: 1800 893 885

www.deafsocietynsw.org.au

செவித் திறனற்றோர் தமது முழு உரிமைகளையும் பெறவும், ஆஸ்திரேலியக் குடிமக்கள் எனும் முறையில் தமது பொறுப்புகளை நிறைவேற்றவும் 'நி.ச.வே மாநில காது கேளாதோர் சங்கம்' (The Deaf Society of NSW) சமூகத்திற்குள்ளாகப் பணியாற்றுகிறது.

பரமட்டா, நியூகாஸில், கா/ப்ஸ் கோஸ்ட் மற்றும் லிஸ்மோர் ஆகிய இடங்களில் 'நி.ச.வே மாநில காது கேளாதோர் சங்க' (The Deaf Society of NSW) த்தின் அலுவலகங்கள் உள்ளன.

Dubbo & District Deaf Club

http://www.hearourheart.org/dubbo--district-deaf-club.html

தொலைபேசி: (02) 6884 6714

செவிமடுப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளவர்கள் மருத்துவ மற்றும் கல்வி உதவிகளை அடைய 'செவித்திறன் அற்ற, மற்றும் செவித்திறன் குறைபாடுகள் உள்ளோருக்கான 'டப்போ அண்ட் டிஸ்ட்ரிக்ட் பெற்றோர் உதவி குழு' (Dubbo & District Parent Support Group for the Deaf/Hearing Impaired Inc) எனும் அமைப்பு உதவுகிறது.

'செவித்திறன் இல்லா குழந்தைகளது பெற்றோர்'

தொலைபேசி: (02) 9871 3049
தொலைபேசி: (02) 9871 3193

www.podc.org.au

முன்னாளில் 'Parent Council for Deaf Education' என்று அழைக்கப்பட்ட 'Parents of Deaf Children (PODC)) எனும் இலாப நோக்கற்ற அமைப்பானது நி.ச.வே மாநிலத்திலுள்ள செவித்திறன் அற்ற குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினரது பெற்றோர்களுக்கு ஆதரவளித்து வருகிறது. பலதரப்பட்ட தகவல்கள், உதவியாதரவு மற்றும் பரிந்துரை சேவைகளை இந்த அமைப்பு வழங்குகிறது.

பெற்றோர் மற்றும் இதர குழுக்கள்

ஆஸ்திரேலிய மூலவளங்கள்

‘அவுஸ்திரேலிய செவித்திறன் அமைப்பு’

அவுஸ்திரேலியாவில் காணப்படும் செவித்திறன் இழப்பு, செவிமடுப்புக் கருவிகள் மற்றும் செவித்திறன் ஆய்வுகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்கள்

www.hearing.com.au

பிறந்த குழந்தையிலிருந்து 26 வயது வரைக்கும் உள்ள இந்த நாட்டுப் பிரசைகளான அல்லது நிரந்தர வதிவிடவாளர்களான இளம் வயது அவுஸ்திரேலியர்களுக்கு செவிமடுப்புக் கருவிகளை உள்ளடக்கிய செவிமடுப்பு சேவைகளை வழங்கும் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவி பெறும் அமைப்பே ‘அவுஸ்திரேலிய செவித்திறன் அமைப்பு’ (Australian Hearing) என்பதாகும். செவிமடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டால் அறவிடப்படும் சிறியதோர் பராமரிப்புக் கட்டணத்தைத் தவிர இச்சேவைகளுக்கு எவ்வித கட்டணமும் இல்லை. பார்க்க: www.hearing.com.au

புதிதாய்ப் பிறந்துள்ள குழந்தைகளின் செவித்திறனை சோதிப்பதிலும், செவிமடுப்புக் கருவிகளைப் பொருத்துவதிலும் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள குழந்தைகளுக்கான செவியியலாளர்களால் குழந்தைகள் பார்க்கப்படும். உங்கள் குழந்தையின் செவித்திறன் சோதனை முடிவுகளை உங்களது குடும்ப செவியியலாளர் உங்களுடன் கலந்தாலோசிப்பார், மற்றும் குழந்தை வளர வளர செவித்திறன் இழப்பு எத்தகைய தாக்கத்தை உங்கள் குழந்தையின் மீது ஏற்படுத்தக்கூடும் என்பது குறித்த தகவல்களை உங்களுக்குத் தருவார். ஒலிப்பெருக்கம் செய்வதற்கான தெரிவுகள் குறித்தும், உங்கள் குழந்தைக்கான செவிமடுப்பு மற்றும் தொடர்பாடல் வளர்ச்சிக்கான திட்டமிடல் குறித்தும் உங்களது செவியியலாளர் உங்களுடன் கலந்துரையாடுவார். அத்துடன் பொருத்தமாயின், செவிமடுப்பு சாதனங்களை குழந்தைக்கு வழங்குவது குறித்தும் உங்களுடன் கலந்துரையாடுவார். செவிமடுப்பு சாதனம் பொருத்தப்பட்ட பிறகு, உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டு மீள்பார்வை கால அட்டவணை ஒன்றையும் இவர் ஒழுங்கு செய்வார்.

‘தேசிய ஒலியியல் பரிசோதனைக்கூடம்’ (National Acoustic Laboratories (NAL)) என்று அழைக்கப்படும் ‘அவுஸ்திரேலிய செவித்திறன் அமைப்’(Australian Hearing)-பினரது ஆய்வுப் பிரிவு அதனது ஆய்வுகளுக்காக உலகளவில் பெயர் பெற்ற அமைப்பாகும். ‘The Longitudinal Outcomes Study for Children with Hearing Impairment (LOCHI)’ என்று அழைக்கப்படும் கண்காணிப்பு முறையானது செவித்திறன் இழப்பு உள்ள அநேகக் குழந்தைகளைக் கண்காணித்து அவர்களது பெற்றோர்களுக்கும், இத்தோடு சம்பந்தப்பட்ட தொழிலர்களுக்கும் செவித்திறன் இழப்பினால் ஏற்படும் தாக்கம், மற்றும் துரித நோயறிவு மற்றும் தலையீடு ஆகியவற்றின் பலன்கள் ஆகியவை குறித்த முக்கியமான தகவல்களை வழங்குகிறது. மேலதிகத் தகவல்களுக்கு:

www.nal.gov.au
www.outcomes.nal.gov.au

‘ஆஸ்திரேலிய செவித்திறன் இழந்த குழந்தைகள்’

ஆஸ்திரேலியாவில் வாழும் செவித்திறன் குறைந்த மற்றும் செவித்திறன் இழந்த குழந்தைகளின் பெற்றோருக்கானஇணையவழி ஆதரவு மற்றும் மூலவளங்கள்.

www.aussiedeafkids.org.au

‘ஆஸ்திரேலிய செவிஒலியியல் சங்கம்’

ஆஸ்திரேலியாவில் கிட்டும் செவித்திறன் சேவைகள் பற்றிய தகவல்கள் வழங்கும்.

www.audiology.asn.au

‘சிட்னி காச்லியர் பொருத்தல் மையம்’

‘காச்லியர் பொருத்தல் பற்றிய தகவல்கள் வழங்குகிறது.

www.scic.org.au

பன்னாட்டு மூலவளங்கள்

ஆரம்பங்கள்

செவித்திறன் இழந்த மற்றும் செவித்திறன் குறைந்த குழந்தைகளின் பெற்றோருக்காக.

http://beginningssvcs.com

‘கைகளும் குரல்களும் (யு.எஸ். ஏ)’

செவித்திறன் இழந்த மற்றும் செவித்திறன் குறைந்த குழந்தைகளுக்கும் அவரது குடும்பங்களுக்கும் மற்றும் இக் குழந்தைகளுக்கு சேவையாற்றும் தொழிலர்களுக்கும் உதவி வழங்கும் அமைப்பு. இது பெற்றோரை மையமாய்க் கொண்டதாகும்.

www.handsandvoices.org

ஜான் ட்ரேஸி மருத்துவ நிலையம்

செவித்திறன் இழப்புள்ள இளம் குழந்தைகளுக்கு பெற்றோரை மையமாகக் கொண்ட உலகளாவிய சேவையை வழங்குகிறது.

www.jtc.org

எனது குழந்தையின் செவித் திறன்

www.babyhearing.org

‘தேசீய செவித்திறனற்ற குழந்தைகள் அமைப்பு’ (யு.கே)

செவித்திறனற்ற குழந்தைகளுக்கும், இளைஞருக்கம், அவரது குடும்பங்களுக்கும் ஆதரவு, தகவல் மற்றும் அறிவுரை-ஆலோசனைகளை வழங்குகிறது.

www.ndcs.org.uk

கட்டுக் கற்கள்

அன்புடைய பெற்றோருக்கு,

சமீப காலத்தில் உங்களது குழந்தைக்குக் காது கேட்கும் குறை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருந்தால், உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். எங்களது பிள்ளைகளுக்கும் இது கண்டறியப்பட்ட போது நாங்களும் தனிமையையும், துயரத்தையும் அனுபவித்தோமே. இச் செய்தி ஒரு பேரதிர்ச்சியாகவே இருக்கும்.

இருப்பினும், உங்கள் குழந்தை என்னென்னவெல்லாம் செய்யுமென்று குழந்தை பிறப்பதற்கு முன்பே நீங்கள் நினைத்தீர்களோ அவை அனைத்தையும் உங்கள் குழந்தை செய்யும் என்பதை வரவிருக்கும் வாரங்களிலும், மாதங்களிலும், ஆண்டுகளிலும் நீங்கள் பார்ப்பீர்கள். உங்கள் குழந்தை உங்களைப் பார்த்து புன்னகை புரியும், பேசும், பாடசாலைக்குச் செல்லும், விளையாடும் மற்றும் வேலைக்கும் போகும். வாழ்க்கை எப்பொழுதுமே க‘டம் இல்லாமல் இருக்காது, ஆனாலும் வளர்ந்து மகிழ்வாகவும், திருப்தியாகவும், சுதந்திரமாகவும் வாழ உங்கள் குழந்தைக்கு நீங்கள் காட்டும் அன்பும், உதவியும் துணைபுரியும்.

காது கேளாத, மற்றும் காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளது பெற்றோரால் இக் குறுநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நீங்கள் மட்டும் தனித்து அல்ல என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்பதே எங்கள் அவா. மற்ற பெற்றோரிடமிருந்து நிறைய விடயங்களை நாங்கள் தெரிந்துகொண்டுள்ளோம், மற்றும் இச் சிற்றேட்டினை உங்களுக்கென உருவாக்க அவர்களுக்குத் தெரிந்த விடயங்களையும் அவர்களது அனுபவங்களையும் நாங்கள் பகிர்ந்துகொண்டுள்ளோம். இதை

‘கட்டுக் கற்கள்’ (Building Blocks) என அழைக்கிறோம், ஏனெனில், உங்கள் குழந்தைக்கென சந்தோ‘மான மற்றும் வெற்றிகரமான எதிர்காலத்தினை உருவாக்க நீங்கள் தொடங்குகிறீர்கள்.

உங்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள், உங்கள் குழந்தையுடன் மகிழ்வாக இருங்கள்!

முதலாவதாக...

செவித்திறன் இழப்பை முன்னதாகவே கண்டறிய வேண்டும் என்பதற்கான **பிரதான நோக்கம்** குழந்தையுடன் தொடர்பாடல் கொள்ளும் வழிகளைத் தெரிந்து கொள்ளவே ஆகும். குழந்தையை அணைப்பது, அமைதிப்படுத்துவது, ஆட்டுவது, குழந்தையைப் பார்த்துப் புன்னகைப்பது மற்றும் பாடுவது ஆகிய அனைத்துமே தொடர்பாடல் கொள்ளும் முறைகள்தான்.

உங்கள் குழந்தையின் சிறப்பான நலனே உங்களது நோக்கமாயிருக்கும். பிள்ளைகளுக்கு இயற்கையாக உதவுபவர்கள் பெற்றோர்களே. எனவே உங்கள் குழந்தையின் எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் நீங்கள் பெரும் பங்கு வகிக்க வேண்டும்.

ஒவ்வொரு அடியாக முன்னேறுங்கள் - நீண்ட பயணத்தின் துவக்கம் ஒரு சிறு அடியே.

பல இடங்களிலிருந்தும் **உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு** தகவல்களைச் சேகரியுங்கள். பாரபட்சமற்ற தகவல்களையும், உதவியையும் பெறும் பெற்றோர்கள் பொதுவாக தமது குழந்தைக்கும், தமது குடும்பத்திற்கும் ஏற்ற சரியான முடிவுகளையே எடுப்பர்.

முடிவெடுப்பதற்கு **உங்களுக்குத் தேவைப்படும் நேரத்தினை செலவிடுங்கள்** - அவசரப்படவேண்டிய அவசியமில்லை. இருப்பினும், மாதக் கணக்கில் நேரம் எடுத்துக் கொள்வது சரியல்ல.

சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளக் **கேள்விகள் கேளுங்கள்** மற்றும் அளிக்கப்படும் பதில்கள் உங்களுக்குப் புரிகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களுடன் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களைக் குறித்துத் தருமாறு **உங்கள் குழந்தையின் மருத்துவர்களையும், செவிஒலி நிபுணர்களையும் கேளுங்கள்.**

உங்களது கரிசனங்கள் மற்றும் கவலைகள் குறித்து **தயக்கமின்றி வாய்விட்டுப் பேசுங்கள்**.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் உதவவும், ஆதரவளிக்கவும் **மற்றவர்களை அனுமதியுங்கள்** - தேவைப்படும் போது உதவி வேண்டுமெனக் கேளுங்கள்.

உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் இழப்பு **குறித்த அனைத்து விவரங்களையும் ஒரே இடத்தில் திரட்டி வையுங்கள்.**

உங்களையும் **கவனித்துக் கொள்ளுங்கள்** - வெளியே சென்றுவர நேரம் ஒதுக்குங்கள்.

வலுவான அடித்தளம்...

உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறது என்ற செய்தி ஒரு அதிர்ச்சியாகும். அதிரு'டவசமாக, உங்கள் குழந்தைக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் குழந்தையைத் தொடுவது, அதனுடன் பேசுவது, குழந்தையை ஆசுவாசப்படுத்துவது, அதனுடன் அன்பாயிருப்பது ஆகியவைதான் - இவை எல்லாம் பெற்றோருக்கு நன்கு தெரியும். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் பலவுள்ளன, இன்னும் நீங்கள் எடுக்கவேண்டிய முடிவுகளும் உள்ளன. எனவே, உங்கள குழந்தையுடன் மகிழ்வாக இருந்து, உங்களுக்கு வசதியான அன்றாட செயல்முறைகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்களது மருத்துவரும், செவிஒலி நிபுணரும் கூறியதில் இருந்து செவித்திறன் இழப்புள்ள குழந்தையை கவனிப்பது என்றால் என்ன என்பது குறித்து ஏற்கனவே சிறிது அறிந்து கொள்ளத் துவங்கியிருப்பீர்கள். இத் தகவல்கள் அனைத்தும் சமாளிக்க இயலாத அளவுக்கு இருக்கக்கூடும். ஆனாலும், செவித்திறனிழப்பு மற்றும் இதற்கான சிகிச்சை ஆகியன குறித்து எந்த அளவுக்கு அதிக விவரங்கள் தெரிந்திருக்கிறதோ அந்த அளவுக்கு நீங்கள் இந்த வி'யத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம், மற்றும் செய்ய வேண்டிய காரியங்களை இன்னும் எளிதாய்ச் செய்யலாம்.

விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பது தனி பலத்தைத் தரும். பல இடங்களிலிருந்தும் முடிந்த அளவுக்கு வி'யங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். தகவலேடுகள், புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் இணையதளங்களிலிருந்து விடயங்களை வாசியுங்கள். சில தகவல்கள் உங்களுக்கு மிகவும் உதவியாய் இருக்கும், வேறு சில உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கும். நமது குழந்தைகள் அனைவருமே தனிநபர்கள்தான், மற்றும் நமது குடும்பங்களுக்கென வெவ்வேறு தேவைகள் உள்ளன. ஒரு குடும்பத்திற்குப் பொருத்தமான ஒரு விடயம் உங்கள் குடும்பத்திற்குச் சரியானதாய் இல்லாமல் இருக்கலாம்.

உங்களைக் கவனித்துக் கொள்வது குறித்து...

தம் குழந்தைக்கு செவித்திறன் இழப்பு உள்ளது என அறியும் பெற்றோர்கள் வெவ்வேறு விதமாக இதை எடுத்துக் கொள்வர். இதை ஏற்றுக் கொள்ள மறுத்தல், கோபம், துயரம் மற்றும் அச்சம் ஆகிய அனைத்தும் பொதுவான எதிர்ச்செயல்கள்தான். நம்மில் பலர் அழுவோம். செவித்திறனிழப்பு இருப்பது கண்டுபிடிக்கப்படும் போது நமது எதிர்ச்செயல் என்னவாய் இருக்கும் என்பது நமக்கும் நமது குடும்பத்தினருக்குமே உரித்தான பல விடயங்களைப் பொறுத்திருக்கிறது. காலப் போக்கில் இந்தக் கடும் உணர்ச்சிகள் மறையும். சூழ்நிலைகளை ஏற்றுக் கொண்டு, வாழ்க்கையைத் தொடர நாம் கற்றுக் கொள்வோம் - செவித்திறன் இழப்பிற்கு நமது வாழ்க்கையில் என்ன பங்கு என்பது பற்றிய கருத்துநோக்கினை நாம் பெறுவோம். இருந்தும் துயரமும், துக்கமும் ஏற்படும் நேரங்கள் இருக்கும் - அன்புடைய பெற்றோராய் இருப்பதன் ஒரு பகுதியாகும் இது.

காது கேட்கும் திறன் இழப்புள்ள குழந்தை குடும்பத்தில் இருக்கும் அனைவர் மீதும் தாக்கம் ஏற்படுத்தும். தமக்கு ஏற்பட்டுள்ள புதிய பொறுப்புக்களை பெற்றோர்கள் வெவ்வேறு முறையில் அணுகுவர். அவர்களது உணர்வுகளும் மறு செயல்களும் வெவ்வேறாய் இருக்கும். உங்களது வாழ்க்கைத்துணைவரிடம் உங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு அவர்களது தேவைகளையும் கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடம் உங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது உதவக்கூடியதாக இருக்கலாம். குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் மனம் திறந்து பேசுவது உங்கள் குழந்தையின் செவித் திறன் இழப்பு குறித்து அவர்களும் உங்களுடன் தயக்கமின்றி இது பற்றிப் பேசி உங்களுக்கு உதவதில் தவறில்லை எனும் எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும். உங்களுக்கு மற்ற குழந்தைகள் இருந்தால் அவர்களது உணர்ச்சிகளையும் தேவைகளையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

உங்களது குழந்தையின் உலகிற்கு நீங்களே மையம், எனவே வரவிருக்கும் அடுத்த சில மாதங்களில் உங்களை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டியது முக்கியம். முயன்று போதுமான உறக்கத்தினைக் கொள்ளுங்கள். நல்ல ஆரோக்கியமான உணவு வகைகளை உண்டு, தவறாத உடற்பயிற்சியை மேற்கொள்ளுங்கள். தினமும் ஒரு முறை நடப்பது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் நல்லது!

உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் இழப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட முதல் சில வாரங்களில் உங்களால் மனதை எதன் மீதும் செலுத்த முடியாது, மற்றும் எதையும் 'சரிவரச்' செய்ய முடியாது. குடும்பத்தினரும் நண்பர்களும் அளிக்கும் உதவியை ஏற்றுக் கொள்ளுங்கள். குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்குமென சில யோசனைகளைக் கொண்ட தகவல் ஏடு ஒன்றினை நாங்கள் தயாரித்துள்ளோம், இதை நீங்கள் அவர்களுக்குத் தரலாம். சாப்பாடு விடயங்களில் உங்களுக்கு உதவுவது, குழந்தையைப் பார்த்துக் கொள்வது, உங்களது மற்ற குழந்தைகளை பள்ளிக்கு இட்டுச் செல்வது போன்ற செயல்கள் உங்களுக்கு உதவியாக இருக்கும் மற்றும் அவர்கள் உங்கள் மீது கரிசனையாக இருப்பதைக் காட்ட இது அவர்களுக்கு உதவும்.

உங்களுக்குத் தேவைப்படும்...

இரண்டு கோப்புகள் (ring binders) – உங்கள் குழந்தையின் சோதனை முடிவுகளுக்காக ஒன்று மற்றும் செவித்திறன் இழப்பு, சேவைகள் ஆகியவற்றிற்காக அடுத்தது.

'தொடர்பு விவர அட்டை' புத்தகம் (business card holder) – நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் 'தொடர்பு விவர அட்டை'யை வாங்கி, தேவைப்படும்போது உடனே பயன்படுத்தக் கூடிய வகையில் வைத்திருங்கள்.

ஒரு நாள்காட்டி – அடுத்த சில மாதங்களில் பல சந்திப்புவேளைக (appointments) ளுக்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். நண்பர்களுடன் காப்பி அருந்தவோ அல்லது சாப்பாட்டிற்கோ முன்னரே நேரம் ஒதுக்க மறக்க வேண்டாம் (அவர்களே சமைக்கட்டும்!).

ஒரு குறிப்பேடு (journal) – விடயங்களைக் குறித்து வையுங்கள். மனம் அழுத்தமுற்ற நிலையில் நாம் இருக்கும் போது நம்மிடம் சொல்லப்படும் விடயங்களை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம், எனவே விடயங்களைக் குறித்து வைப்பது நல்லதொரு யோசனையாகும். சந்திப்புநேரங்கள், தொலைபேசி அழைப்புக்கள் போன்றவற்றை எழுதி வையுங்கள். இது சுருக்கமாக இருந்தாலும் பயன்படக் கூடும். தமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் குறித்து வைப்பது பயனுள்ளதாயிருக்கும் என சில பெற்றோர்கள் கருதுகின்றனர்.

உங்களது அணி (team)...

தொடரும் வாரங்களிலும் மாதங்களிலும் வெவ்வேறு வகைப்பட்ட பலரையும் நீங்கள் சந்திப்பீர்கள். பல சேவைகளை வழங்கும் குழு ஒன்றின் அங்கத்தினர்கள் இவர்கள், மற்றும் உங்களுக்கு வழிகாட்டி உதவுவதே இவர்களது பணியாகும்.

- உங்கள் குழந்தைக்கென உள்ள அணியில் நீங்களும் உங்கள் குடும்பத்தினருமே மிக முக்கியமான உறுப்பினர்கள், எனவே நீங்கள் அணியிலுள்ள மற்ற அங்கத்தினருடன் நல்ல தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது அத்தியாவசியம். அப்போதுதான் உங்களது கவலைகளைத் தயக்கமின்றி வெளிப்படுத்தவும், உங்கள் தேவைகள் குறித்து அவர்களுடன் தொடர்பாடல் கொள்ளவும் உங்களால் இயலும்.
- சந்திப்புவேளைகளுக்குச் செல்லும் போது கேள்விகளை அட்டவணையாய் எழுதி எடுத்துச் செல்லுங்கள். மருத்துவரிடம் அல்லது ஒலியியல் நிபுணரிடம் செல்லும் போது மி முக்கியமான கேள்விகளை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம்.
- எந்தக் கேள்வியுமே சிறுபிள்ளைத்தனமானது அல்ல - இதே கேள்வியை உங்களுக்கு முன்னர் யாராவது ஒருவர் கேட்டிருப்பார்.
- உங்கள் கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் உங்களுக்கு நன்றாய்ப் புரிகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் - வீட்டுக்குத் திரும்பும்போது சந்தேகத்துடன் செல்லாதீர்கள்.
- உங்களால் ஆங்கிலம் சரளமாகப் பேச முடியாதெனில், உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.
- அறிக்கைகள் மற்றும் சோதனை முடிவுகளின் பிரதிகளை உங்களது பதிவேடுகளுக்கென வாங்கி வைக்க மறக்காதீர்கள். நாள் போக்கில் இவை மிகவும் பயனுள்ளதாய் இருக்கலாம். நீங்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ள கோப்பில் இவற்றை வையுங்கள்!
- தொழிலர் (professional) ஒருவரால் செய்யப்பட்ட பரிந்துரைப்பு சரியானதுதானா என்று அவரைக் கேட்பதிலோ அல்லது இரண்டாம் கருத்து (second opinion) வேண்டுமெனக் கேட்பதிலோ தவறில்லை. உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பிற்கு சிகிச்சையளிக்கும் விடயத்தில் சவுகரியமாய் இருப்பதாய் நீங்கள் உணர வேண்டும்.

தகவல்கள்...

காது கேட்கும் திறன் இழப்பு மற்றும் இதை நிர்வகித்தல் ஆகியன குறித்த நல்ல தரமான தகவல்களை நீங்கள் பெறுவது மிக முக்கியமாகும். பல்வேறு இடங்களிலிருந்தும் எவ்வளவு விவரங்கள் கிடைக்கிறதோ அவ்வளவையும் சேகரியுங்கள், மற்றும் இவை குறித்து உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், உங்கள் அணியிலுள்ள உறுப்பினர்கள் மற்றும் இதர செவிமடுப்புத்திறன் இழந்த குழந்தைகளது பெற்றோர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுங்கள். அப்படிச் செய்யும் பொழுது உங்கள் குழந்தையின் எதிர்காலம் குறித்து உங்களால் நல்ல முடிவு ஒன்றினை எடுக்க இயலும்.

ஆரம்பத்தில் கிடைக்கும் தகவல்கள் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கின்றன என சில பெற்றோர்கள் நினைக்கும் அதே வேளையில் இன்னும் சிலரால் போதுமான தகவல்களைப் பெற முடிவதில்லை. உங்களுக்கு ஏற்ற வேகத்தில் தகவல்களைப் பெற முயலுங்கள். ஆனால், வர இருக்கும் பல ஆண்டுகளில் புதிய, நடப்பிலுள்ள தகவல்களை நீங்கள் அறிந்து கொள்வது அவசியம் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். தொழில்நுட்பம், அரசாங்கத் திட்டங்கள் போன்றவை காலப் போக்கில் மாறிக் கொண்டிருக்கும், ஆதலால் உங்கள் குழந்தை வளர வளர அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை நீங்கள் உடனுக்குடன் தெரிந்து கொண்டு வரவேண்டும்.

நல்ல, துல்லியமான மற்றும் நம்பத்தகுந்த தகவல்கள் கிட்டும் பல சிறந்த மூலவளங்கள் உள்ளன – புத்தகங்கள், தகவலேடுகள் மற்றும் இணைய மூலவளங்கள். உங்கள் குழந்தைக்கு செவித்திறனிழப்பு இருக்கிறதா இல்லையா என அறிய சோதனை நடத்தப்படும் மருத்துவமனையில் உள்ள குழந்தைமருத்துவரையோ அல்லது செவிஒலிநிபுணரையோ உங்களுக்குப் பரிந்துரைகள் செய்யுமாறு கேட்பதற்கு ஆஸ்திரேலிய செவித்திறன் சேவை *(Australian Hering)* -யிலிருந்து கிடைக்கும் 'ஊழைஉநள' என்ற பதிப்பு உதவும். இந்த வழிகாட்டியின் கடைசிப் பக்கத்தில் இணைய மூலவளங்கள் சில சேர்க்கப்பட்டுள்ளன.

இதர செவித்திறன் இழந்த அல்லது பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து வியக்கவைக்கும் அளவுக்குத் தகவல்களையும், அவர்களது அனுபவங்களையும் தெரிந்துகொள்ளலாம் என பெரும்பான்மையான பெற்றோர்கள் கருதுகின்றனர்.

முடிவுகள்...

எங்கள் பிள்ளைக்கு செவித்திறன் இழப்பு உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட போது நாங்கள் எடுக்க வேண்டிய முடிவுகள் பல இருப்பது போல் தெரிகிறது. அதிர்ச்சியிலிருந்து நாங்கள் மீளாத சமயத்திலும், எங்களுக்கு அதிக விவரங்கள் தெரியாத இந்த வேளையிலும் இம்முடிவுகளை நாங்கள் எடுத்தாக வேண்டும்.

- அவசரப்பட்டு எதையும் செய்யாதீர்கள். உங்கள் குழந்தையின் செவித்திறன் இழப்பு மற்றும் குழந்தையின் தேவைகள் ஆகிவை பற்றித் தெரிந்துகொள்ள சில வாரங்களைச் செலவழிப்பது குழந்தையின் எதிர்காலத்தைப் பாதிக்காது. இருந்தாலும், இதற்காக மாதக் கணக்கில் நேரம் செலவழிப்பது நல்லதல்ல. உங்கள் குழந்தைக்கு உதவி அளிக்கப்பட வேண்டும் மற்றும் குழந்தைக்கு 6 மாதங்கள் ஆகும்போது முற்பட்ட தலையீட்டு நடவடிக்கை துவக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்படுகிறது.
- உங்கள் குழந்தைக்கும், குடும்பத்திற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான பாதையைத் தேர்ந்தெடுக்கும் உரிமம் உங்களுக்குண்டு. முடிவுகளை எடுக்கும் முன்பாக உங்களுக்குக் கிட்டும் விருப்பத்தேர்வுகள் (options) அனைத்தையும் நீங்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தெளிவான ஒரு முடிவை மேற்கொள்பவராக நீங்கள் இருக்க வேண்டும்.
- நீங்கள் இப்பொது எடுக்கும் முடிவுகள் மாற்றப்படலாம் - உங்கள் குடும்பத்திற்கு தற்சமயம் ஏற்றதாய் இருக்கும் முடிவானது சில ஆண்டுகளுக்குப் பிறகு சரியானதாக இல்லாமல் இருக்கக்கூடும்.
- உங்கள் குடும்பத்திற்கு ஏற்ற முற்பட்ட தடுப்ப நடவடிக்கை சேவை ஒன்றைத் தேடுங்கள். அவர்களை நேரில் சந்தித்து, பணியாளர்களிடம் பேசுங்கள். சிறிது காலத்திற்கு அவர்கள் உங்களது வாழ்வில் முக்கிய அங்கமாயிருப்பர், எனவே அவர்கள் அளிக்கும் சேவையில் உங்களுக்கு நிம்மதியும் நம்பிக்கையும் இருக்க வேண்டும்.



கிராமப்புறக் குடும்பங்கள்...

பெருநகர்ப் பகுதிக்கு வெளியே வாழும் குடும்பங்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. சிறப்பு மருத்துவ வசதி மற்றும் செவி ஒலி சேவைகளைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கலாம். வேலை, மற்ற குழந்தைகளுக்கான கவனிப்பு மற்றும் சிறு குழந்தையுடன் பயணம் செய்தல் ஆகிய விடயங்கள் கிராமங்களில் இருந்து வரும் குடும்பங்களுக்கு ஏற்படும் அழுத்தத்தினை அதிகரிக்கச் செய்யும். 'இப்போதுதான் வீட்டுக்குத் திரும்பி இருக்கிறோம், ஆனால் உடனே புறப்படவேண்டி இருக்கிறதே,' என்று உங்களுக்குத் தோன்றலாம்.

இது போகப் போக சரியாகும். உங்களது சந்திப்புநேரங்களின் எண்ணிக்கை குறையும், மற்றும் உங்களுக்கு அருகில் உள்ள ஆஸ்திரேலிய செவி மடுப்பு மையம் *(Australian Hering Centre)* ஒன்றுக்கு நீங்கள் செல்வீர்கள். நிதிச் சுமையைக் குறைக்கக் கூடிய சில சேவைகள் உங்களுக்குக் கிட்டும். உங்கள் மாநிலத்தில் கிட்டும் பயண மற்றும் தங்கும் இடத்திற்கான நிதியுதவி குறித்து உங்களது மருத்துவர், செவிஒலிநிபுணர் அல்லது மருத்துவமனை சமூகப் பணியாளரைக் கேளுங்கள்.

பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுங்கள். உங்கள் மனநிலை சரியில்லை என்றால் வண்டி ஒட்டாதீர்கள். சந்திப்புநேரத்திற்குப் பிறகு இரவு தங்கிவிட்டு, நீங்களும் குழந்தையும் ஓய்வு எடுத்த பிறகு அடுத்த நாள் வீட்டுக்குத் திரும்புவது நல்லதாயிருக்கலாம்.

நீங்கள் செய்யும் வேலைகளை முன்னேற்பாடாக ஒழுங்குபடுத்தி வையுங்கள். அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் வைத்திருங்கள். கையெழுத்து இட வேண்டிய படிவங்கள் ஏதுமிருப்பின் நினைவாய் எடுத்துச் செல்லுங்கள். நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் அனைத்தையும் எழுதி எடுத்துச் செல்லுங்கள். மருத்துவர், செவிஒலிநிபுணர் அல்லது இதர மருத்துவத் தொழிலர்கள் ஆகியோர் அவசரப்படாமல் நிதானமாகப் பணியாற்றுவதை உறுதி செய்யுங்கள். உங்கள் சந்திப்புநேரத்திற்கு நீங்கள் தொலைதூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள், எனவே உங்களது வருகையால் பயன் ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணத்துடன் நீங்கள் திரும்ப வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மிகவும் சுலபமான சந்திப்புநேரங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வெள்ளிக்கிழமை மாலை மற்றும் திங்கள் காலை நேரம் உங்களது குடும்ப வாழ்க்கையை அதிகம் பாதிக்காமல் இருக்கும்.

உங்களைப் பற்றிக் கரிசனம் கொண்டவர்கள் உங்களுக்கு உதவியும் ஆதரவும் வழங்கத் தயாராயிருப்பர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்கு உதவி தேவைப்படும் போது அவர்களைக் கேளுங்கள் - நீங்கள் அவர்களுக்குத் திரும்ப உதவும் நேரங்கள் பின்னர் வரும்.

நீங்கள் தனித்து அல்ல...

தம் குழந்தைக்கு காது கேட்கும் திறனில் இழப்பு இருக்கிறது என்று அறியும் பெரும்பாலான பெற்றோர்கள் தாம் மிகவும் தனித்து இருப்பதாக உணர்கின்றனர். ஆனால் நீங்கள் தன்னந்தனியாய் இல்லை. உங்களுக்கு முன்னர் இதே நிலையில் இருந்த பெற்றோர்கள் பலர் உண்டு, எனவே அதே சூழ்நிலையில் இருக்கும் குடும்பங்களுடன் நீங்கள் தொடர்பு கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை இவர்கள் அறிவர்.

மற்ற பெற்றோர்களை நீங்கள் எங்கு கண்டுபிடிக்கலாம்? உங்களது செவிஒலி நிபுணரைச் சந்தித்து உள்ளூர்ப் பகுதியில் உள்ள மற்ற பெற்றோர்களை சந்திக்க விரும்புகிறீர்கள் என அவரிடம் சொல்லுங்கள். மற்ற குடும்பங்களிடம் இருந்து உதவி பெறவும் அவர்களுடன் நட்பு கொள்ளவும் உங்களது முற்பட்ட தடுப்பு நடவடிக்கைச் சேவையினர் உதவுவர். அனைத்து வயதுகளிலும் உள்ள குழந்தைகளின் பெற்றோருக்குத் தகவலும் உதவியும் வழங்கக் கூடிய 'பெற்றோர் குழுக்கள்' (Parent Groups) பெரும்பாலான மாநிலங்களில் உண்டு. கடைசியாக, ஆனால் முக்கியமாக, 'இணையக் குழுக்க' (online groups) ளும் உண்டு. செவித்திறன் இழப்புள்ள குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் இக்குழுக்களிடமிருந்து அன்றாட சூழ்நிலைகள் குறித்த உதவியையும் நடைமுறைக்கேற்றத் தகவல்களையும் பெற்றுள்ளனர்.

மற்ற பெற்றோரிடமிருந்து நீங்கள் நிறையத் தெரிந்து கொள்வீர்கள். உங்களுக்குப் பயனளிக்கக் கூடிய அனுபவங்களும், அறிவும் அவர்களிடம் நிறைய உண்டு. உங்களது சொந்த நோக்கு மற்றும் அனுபவத்திலிருந்து இன்னும் இதர பெற்றோர்கள் கற்றுக் கொள்ளலாம். உண்மையில், இந்த விடயத்தில் நீங்கள் தனித்து அல்ல...